Registered as a news paper.

பக்கங்கள்: பத்து

விலை: ரூபா 6.00

நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

தீபாவளிப் பரிசில்கள்
FREE
கொள்வனவு செய்யும் ஒவ்வொரு பொருளுக்கும் அன்பளிப்பு உண்டு.
சிங்கர்
இல 01, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

மலர் : 02 திருவள்ளுவர் ஆண்டு: 2034 ஐப்பசி 03 ஆம் நாள், ஹிஜ்ரி 1425 ஷஃபான் 23 (20.10.2003) திங்கட்கிழமை இதழ் :20

# புலம்பெயர்ந்த மக்களைச் சந்திப்பதற்கு புலிகள் மீதான தடையை நீக்கவேண்டும்!

### நோர்வே வெளிவிவகார அமைச்சரிடம் வலியுறுத்தியதாக கேணல் கருணா



தமிழீழ விடுதலைப் புலிகளை தடைசெய்துள்ள நாடுகளில், புலம் பெயர்ந்து வாழும் ஈழத்தமிழர்களைச் சந்தித்துக் கலந்துரையாட வேண்டிய தேவை தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு இருப்பதால், விடுதலைப் புலிகள் மீது விதிக்கப்பட்டுள்ள தடைகளை அந்த நாடுகள் நீக்கவேண்டிய அவசியத்தை நோர்வே பிரதி வெளிவிவகார அமைச்சரிடம் தாம் வலியுறுத்தியதாக, தமிழீழ விடுதலைப் புலிகளின் மூத்த தளபதி கேணல் கருணா தெரிவித்தார்.

மட்டக்களப்பில் நேற்றுமுன்தினம் மாலை இடம்பெற்ற ஊடகவியலாளர்களுடனான சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் அமைப்பைத் தடைசெய்துள்ள நாடுகளில் புலம்பெயர்ந்து ஈழத் தமிழர்கள் (10 ஆம் பக்கம் பார்க்க)

### வலி.வடக்கு மீள்குடியமர்வு விவகாரம்

# ராணுவத் தளபதியிடம் விளக்கம் கோரப்பட்டது என்கிறார் ஒஸ்ரின்!

வலி.வடக்கு உயர்பாதுகாப்பு வலயத்திலுள்ள தமது சொந்த இடங்களில் மீளக்குடியமர அனுமதிக்கக் கோரி, அந்தப் பகுதிகளில் இருந்து இடம்பெயர்ந்த பொதுமக்கள் கடந்த செப்ரெம்பர் மாதம் தனிப்பட்ட ரீதியில் பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பனவுக்கு அனுப்பிய கடிதத்துக்கு, பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஒஸ்ரின் பெர்னாண்டோவால் பதில் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

இந்தக் கடிதம் குறித்து பாதுகாப்பு அமைச்சர் கவனத்தில் எடுத்திருப்பதாகவும்,

உயர்பாதுகாப்பு வலயத்தில் குடியமர அனுமதிப்பது தொடர்பாக இராணுவத் தளபதியின் கருத்தை அறிந்துகொள்வதற்காக, அவரிடம் விளக்கம் கோரப்பட்டுள்ளதாகவும் அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## வடக்கு - கிழக்கு இடைக்கால நிர்வாக சபை குறித்த

# புலிகளின் யோசனை 24 அல்லது 31 இல்

# அரசாங்கத்திடம் கையளிப்பதற்கு முடிவு!

### மறுநாள் கிளிநொச்சியில் செய்தியாளர் மாநாடு

(கிளிநொச்சி)

**வடக்கு - கிழக்கில் இடைக்கால நிர்வாக சபையை தோற்றுவிப்பதற்காக - தமிழீழ விடுதலைப் புலிகளால், தயாரிக்கப்பட்டுள்ள திட்டவரைபை அரசாங்கத்திடம் சமர்ப்பிக்க, எதிர்வரும் 24 ஆம் அல்லது 31 ஆம் திகதியென இரு தினங்களைப் புலிகள் தெரிவுசெய்திருப்பதாகத் தெரியவருகிறது.**

இடைக்கால நிர்வாகசபை தொடர்பான புலிகள் தரப்பு திட்டவரைபு, அயர்லாந்தில் அண்மையில் நடைபெற்ற மாநாட்டில் இறுதி செய்யப்பட்டது. இந்தத் திட்டவரைபை நேற்று முன்தினம் கிளிநொச்சிக்கு எடுத்து வந்த விடுதலைப் புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன், தலைவர் வே.பிரபாகரனிடம் சமர்ப்பித்திருந்தார்.

இந்தத் திட்டவரைபை அரசாங்கத்திடம் சமர்ப்பிக்க தலைவர் பிரபாகரன் ஒப்புதல் அளித்திருப்பதாகவும், இத்திட்ட வரைபை எதிர்வரும் 24 ஆம் திகதி அல்லது 31 ஆம் திகதி அரசிடம் கையளிப்பதற்கு முடிவு செய்யப்பட்டிருப்பதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

தீபாவளித் தினமான எதிர்வரும் 24 ஆம் திகதியன்று - சமாதான முயற்சிகளுக்கு எதிராக கொழும்பு நகரில் 10 இலட்சம் பேரைத் திரட்டி மாபெரும் பேரணி ஒன்றினை நடத்த முடிவு செய்யப்பட்டிருப்பதால், அன்றைய தினம் இந்தத் திட்டவரைபை அரசாங்கத்திடம் கையளிப்பது பொருத் (10 ஆம் பக்கம் பார்க்க)

## திருமலையில் ஜனவரி மாதம் அடுத்த பொங்குதமிழ் நிகழ்வு!

(திருகோணமலை)

தமிழ்மக்கள் தமது அபிலாசைகளை சர்வதேச சமூகத்திற்கும், அரசுக்கும் எடுத்துரைக்கும் எழுச்சி நிகழ்வான பொங்குதமிழ் நிகழ்வு வரும் ஜனவரி மாதம் திருகோணமலையில் நடைபெறவுள்ளதாக பொங்கு தமிழ் ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

ஏற்கனவே யாழ்ப்பாணம், வவுனியா, மன்னார் ஆகிய மாவட்டங்களில் 'எமது நிலம் எமக்கு வேண்டும்' என்ற உரிமைக் கோசத்துடன் பொங்கு தமிழ்' நிகழ்வுகள் இடம்பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்த மாவட்டங்களில் தமிழ் மக்கள் வாழும் இடங்களில் பெரும்பாலானவை படையினரால் கையகப்படுத்தப்பட்டுள்ளன. ஆனால், திருகோணமலை மாவட்டத்தில் படையினரால் மட்டுமன்றி, அரசின் ஆதரவுடனான சிங்களக் குடியேற்றங்கள் மூலமும் (10 ஆம் பக்கம் பார்க்க)

## கூட்டமைப்பு - முஸ்லிம்கள் கொழும்பில் இன்று சந்திப்பு!

வடக்கு - கிழக்கு முஸ்லிம் நாடாளுமன்ற ஒன்றியத்துக்கும், தமிழ்த் தேசிய கூட்டமைப்பினருக்கும் இடையில், விசேட சந்திப்பொன்று இன்று இரவு கொழும்பில் நடைபெறவுள்ளது.

அரசாங்கத்துக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையில் இடம்பெறும் பேச்சுவார்த்தைகளில், முஸ்லிம் பிரதிநிதிகள் தனித்தரப்பாகக் கலந்துகொள்ள வேண்டுமென்று, நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ள பிரேரணை குறித்து இந்தச் சந்திப்பில் ஆராயப்படுமெனத் தெரிவிக்கப்படுகிறது.

(10 ஆம் பக்கம் பார்க்க)

## கண்காணிப்புக் குழுவின் தகவல் பரிமாற்றத்தால் விடுதலைப் புலிகளின் ஆயுதக் கப்பல் தப்பியதாம்!

### கடற்படையினர் குற்றச்சாட்டு

(கொழும்பு)

விடுதலைப் புலிகளின் ஆயுதக் கப்பலொன்று முல்லைத்தீவுக் கடலில் தரித்து நின்றதாகக் கிடைத்த தகவலையடுத்து, கடற்படையினர் தேடுதல் நடத்தியபோது, அந்தக் கப்பல் தப்பிவிட்டது.

இந்தக் கப்பல் தப்பிச் சென்றதற்கு போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு வெளியிட்ட தகவல், புலிகளைச் சென்றடைந்ததே காரணம் எனக் கண்காணிப்புக்குழு மீது கடற்படை குற்றம் சாட்டியுள்ளது.

கடந்த வியாழன் மாலை நடந்த இந்தச் சம்பவம் தொடர்பாக கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் தயா சந்தகிரி ஜனாதிபதி சந்திரிகாவுக்கு அறிவித்துள்ளார்.

முல்லைத்தீவுக்குக் கிழக்கே 250 கடல் மைல்கள் (400 கிலோ மீற்றர்) தொலைவில் புலிகளின் ஆயுதக் கப்பல் தரித்து நின்றதான தகவல் கடற்படையின் கிழக்குப் பிராந்தியத் தலைமையகத்திற்குக் கிடைத்தது.

(10 ஆம் பக்கம் பார்க்க)

# தமிழ்ச்செல்வனை புதன்கிழமை கூட்டமைப்பு எம்.பிக்கள் சந்திப்பர்!

### கூட்டணியில் சம்பந்தனுக்கு மட்டும் அழைப்பு

(யாழ்ப்பாணம்)

தமிழ்த்தேசிய கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும், தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியற்துறைப்பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தலைமையிலான குழுவினருக்கும் இடையில் நாளைமறுதினம் புதன்கிழமை விசேட சந்திப்பொன்று கிளிநொச்சியில் இடம்பெறவுள்ளது.

கிளிநொச்சியிலுள்ள அரசியற்துறை நடுவப்பணியகத்தில் காலை 11 மணியளவில் இந்தச் சந்திப்பு இடம்பெறும் என்று புலிகள் தரப்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்தச் சந்திப்பின்போது இடைக்கால நிர்வாக யோசனைகள் உட்பட பல விடயங்கள் ஆராயப்படலாம் என்று, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சிரேஷ்ட பிரமுகர் ஒருவர் தெரிவித்தார்.

இந்தச் சந்திப்பில் கலந்துகொள்ளுமாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் - அகில இலங்கை தமிழ் காங்கிரஸ், ஈ.பி.ஆர்.எல்.எவ் (சுரேஷ் அணி), ரெலோ, ஆகிய கட்சிகளின் நாடாளுமன்ற (10 ஆம் பக்கம் பார்க்க)

## கப்பல் தப்பிச்சென்ற விவகாரம்: ஜனாதிபதி இன்று அவசர கூட்டம்

முல்லைத்தீவுக் கடற்பரப்பில், தரித்து நின்று காணாமற்போன கப்பல் தொடர்பான, உயர்மட்ட மாநாடு ஒன்று ஜனாதிபதி சந்திரிகா தலைமையில் இன்று கொழும்பில் நடைபெறவுள்ளது.

காலை 10 மணிக்கு நடைபெறும் இந்தக் கூட்டத்தில் கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் தயா சந்தகிரி, கிழக்கு கடற்படைத் தளபதி றியர் அட்மிரல் வசந்த கரன்னகொட ஆகியோரைக் கலந்து கொள்ளுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை - இந்தச் சம்பவம் தொடர்பாக உடனடியாக விசாரணைகளை நடாத்துமாறு, பாதுகாப்பு அமைச்சின் செயலாளருக்கு பிரதமர் உத்தரவிட்டுள்ளார்.

இது தொடர்பாக விசாரணையை நடத்துவதற்குச் சமாதான செயலகத்தின் பணிப்பாளர் பேர்ணாட் குணதிலகவிடமும் பிரதமர் பணித்துள்ளார்.

EXPOAIR இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை....
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021 ~ 2223891 2226297
எக்ஸ்போஎயார்

# கூட்டுறவுச் சங்கங்கள் பலருக்கு அடைக்கலம் தரும் ஏணிப்படிகள்!

## கூட்டுறவு பேராளர் சங்கமநிகழ்வில் வே.பாலகுமாரன் தெரிவிப்பு

வடக்கு - கிழக்கில் வாழும் அனைத்து மக்களின் மனங்களிலும் கூட்டுறவின் அடிப்படை அம்சங்கள் இருக்கின்றன. எங்களுக்கான வாழ்க்கைமுறை, நிதிசேகரிக்கும் முறை, தேட்டங்கள் செய்யும்முறை, நாளாந்த உறவுமுறை, வீடுகட்டும் முறை எல்லாவற்றிலும் கூட்டுறவுத் தன்மை இருக்கின்றது. உண்மையில் கூட்டுறவுச் சங்கங்கள் பல பேருக்கு அடைக்கலம் தருகின்றன. அது ஒரு ஏணிப்படியாக இருக்கின்றது.

இவ்வாறு, நேற்றுமுன்தினம் கிளிநொச்சி இந்துக் கல்லூரியில் நடைபெற்ற வடக்கு - கிழக்கு மாகாண கூட்டுறவு பேராளர் சங்கம நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றிய, விடுதலைப் புலிகளின் முக்கியஸ்தரான வே.பாலகுமாரன் தெரிவித்தார்.

அவர் மேலும் அங்கு உரையாற்றுகையில் -

கூட்டுறவுத்துறையின் எதிர்காலம் என்னவாகப் போகிறது என, ஒரு ஆய்வாளன் என்ற வகையில் ஒரு அறிவார்ந்த அடிப்படையில் கூட்டுறவுத்துறையின் பழைய சங்கமம் ஏட்டினைப் பார்த்தேன்.

வடபகுதி மக்கள் இடம்பெயர்ந்த பின்னால் ஏற்பட்ட நெருக்கடிகளுக்கு முகம்கொடுக்கின்ற வகையில், அந்த ஏட்டில் ஒரு ஈர்ப்பு இருந்தது. அந்தப் பத்திரிகை சங்கநாதமாக வெளிவருவதையிட்டு நான் மகிழ்ச்சியடைகின்றேன்.

இந்த சங்கம நாதத்தில் உள்ளூர் சந்தைகள் தொடர்பாக, ஒரு அருமையான கட்டுரையைப் பார்த்தேன். அக்கட்டுரையில் - பரிவின் அடிப்படையில்தான் கூட்டுறவுத் துறையின் வெற்றியும், தோல்வியும் தங்கியிருக்கிறது என்பது எனக்குத் துலாம்பரமாகத் தெரிந்தது.

இந்த ஏட்டின் வெளியீட்டு நிகழ்வு, எம்மை அழிக்க நினைத்தவர்கள், எம்மைப் பிரிக்க நினைத்தவர்கள் மத்தியில் - இன்று அவர்கள் முன்னாலேயே இணைந்துகொள்கின்றோம். நான் ஒரு கூட்டுறவாளன், கூட்டுறவு ஊழியன், கூட்டுறவு பற்றிப் படித்தவன்.

இங்கிலாந்து கைத்தொழில் புரட்சியின்போது - இங்கிலாந்தின் றொபேட்ஏல் சொன்ன கருத்து ஞாபகமாக இருக்கிறது. நடையால் இணைக்க முடியாத மக்களை, இதயத்தால் இணைக்கமுடியும் என்றார்.

ஒரு காலத்தில் சிங்களம் என்றால் காதில்கேட்கமுடியாது வெறுப்பு வரும். ஆனால், இப்போது சிங்களப் பாடல்கள் கேட்கிறோம். சிங்களத்தில் கதைக்கிறோம். சிங்களவர்களுடன் தோழமையுடன் இணைகின்றோம். சிங்களத்தில் எந்த வெறுப்பும் கிடையாது.

ஆனால், இந்த இடம் - நாம் நிற்கும் இடம் 8 வருடங்களுக்கு முன்பு என்ன நிலைமையில் இருந்தது என்பதனையும், சிந்தித்துப் பார்க்கவேண்டும். 8 வருடங்களாக என்ன நிலையில் இருந்தது என்பது குறித்து அனைவருக்கும் தெரியும்.

இந்த இடம் மிகவும் பாதுகாப்பு மிக்க இடம். ஏன் காற்றைக்கூட தடுக்கமுடியும். என்றால் தடுத்திருப்பார்கள். இந்த சூழ்நிலையிலும் இலங்கைத் தீவின் ஒருபகுதி மக்கள் வாழந்தார்கள், வாழந்து முடித்தார்கள், இறந்தார்கள்.

நாங்கள் இப்போது எந்த வேறுபாடும் இல்லாமல், சிங்கள - தமிழ், தமிழ் - முஸ்லிம் இனங்களுக்கிடையே எவர்மீதும் கோபதாபங்கள் கிடையாது. ஒற்றுமையாக இருக்கின்றோம்.

ஒரு கூட்டுறவாளனுக்கு, என்று நல்வாழ்க்கை அமையுமோ - அன்றுதான் மக்களது வாழக்கையும் மேம்படும். கூட்டுறவாளன் மீது குண்டு விழுந்தால் - மக்கள் மீதும் குண்டு விழும். மக்கள் இடம்பெயர்ந்தால்- சங்கமும் இடம்பெயரும். அடிப்படை மக்களுடைய வாழக்கைத்தரம் எவ்வாறு உள்ளதோ - அவ்வாறே கூட்டுறவாளனதும் வாழக்கைத் தரமும் இருக்கும். மண்ணின் வெளிப்பாடாக கூட்டுறவுச் சங்கம் அமையும்.

கூட்டுறவுச் சங்கங்கள் தொடர்ந்தும் கண்காணிக்கப்படுவதும், இம்சைப்படுத்தப்படுவதும் தொடர்ந்தால்- மண்தான் மூடியணைக்கும். இந்த மண்ணிற்குரிய இயல்பான வாழ்க்கைத்தரம், எண்ணங்கள், சிந்தனைகள், வாழ்க்கைத்தரங்களுடன் சம்பந்தப்பட்ட கூட்டுறவுச் சங்கங்கள்- இன்று எவ்வாறு இருக்கின்றன.

கூட்டுறவுச் சங்கங்களை எவர் சரியான கணிப்பு எடுத்தார்கள். மக்களுடைய மனங்களிலே எவர் கூட்டுறவை விதைத்தார்கள். எவரும் விதைக்கவில்லை. கூட்டுறவுச் சங்கங்கள் - இயல்பாக தன்னுடைய போராட்டங்கள் காரணமாக தப்பித் தள்ளாடி, இன்றைக்கு இந்த நிலைக்கு உயர்ந்துள்ளது என்றால் - அதற்கு ஒரு காரணம் இருக்கும்.

நெருக்கடிவரும்போது, நாட்டில் பொருண்மியச்சிக்கல் வரும்போது, போராட்டங்களினால் நெருக்கடிவரும் போது, இல்லாமை நிலவும்போது, சங்கம் வேண்டும். எல்லாம் மாறினால் சங்கம் தேவையில்லை. இது தான் உண்மை.

வடக்கு - கிழக்கில் வாழும் அனைத்து மக்களின் மனங்களிலும் கூட்டுறவின் அடிப்படை அம்சங்கள் இருக்கின்றது. எமக்கான வாழ்க்கை முறை, எங்களுக்கான நிதிசேகரிக்கும்முறை, தோட்டங்கள் செய்யும் முறை, நாளாந்த உறவுமுறை, வீடு கட்டும்முறை என எல்லாவற்றிலும் கூட்டுறவுத்தன்மை இருக்கின்றது.

உண்மையில் கூட்டுறவுச்சங்கங்கள் பலபேருக்கு அடைக்கலம் தருகிறது. அது ஒரு ஏணிப்படியாக இருக்கிறது.

எனினும், இன்று கூட்டுறவுப்பணியாளரின் நிலையென்ன. பல அரச நிறுவன ஊழியர்கள் - சம்பளம் அதிகரிக்கவேண்டும் எனவும், படித்தவர்கள் எங்கெல்லாம் சென்று உழைக்க நினைக்கும் வேளையில், கூட்டுறவாளர்கள் எமக்காக உணவு கொடுக்கிறார்கள். இவர்களுடைய நிலை உயருகிறதா. இப்படிப்பட்ட சவால்களுக்கு நாம் முகம்கொடுத்து முன்னேறவேண்டும்.

பொதுவாக அனைத்துச் சங்கங்களும் அரசியல் மயப்படுத்தப்பட்டவை. அரசியல் ரீதியாக செல்வாக்கிற்கு உட்பட்டவை. இவற்றையெல்லாம் மீறியே முன்னேறவேண்டும்.

கூட்டுறவுத்துறைக்கு அற்புதமான வாய்ப்பு இருக்கின்றது. இன்று பல கவர்ச்சிகரமான விளம்பரங்களுடன் கொக்கக்கோலா உட்பட பல பானங்கள் விற்பனையாகின்றன. இவற்றுடன் நாமும் நிச்சயமாக போட்டிபோட முடியும். எமது பானங்களையும் கவர்ச்சிகரமாக மாற்றமுடியும்.

முயற்சியுள்ள ஒருவர் - சரியான உணவை, மருந்தை, பானத்தை அல்லது சிறிய தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி உருவாக்குகின்ற பண்டங்களை வெளியுலகத்திற்கு சமர்ப்பிப்பின் - எங்களுக்கு ஒரு பெரிய வாய்ப்பு இந்த உலகமயமாக்கலில் கிடைக்கும். எனவே, சங்கமம் தொடர்ந்துவரவேண்டும். இன்னும் முன்னேற வேண்டும், வளர்க்கப்பட வேண்டும் என்று பாலகுமாரன் தெரிவித்தார். (108)

# கால்நடை வளர்ப்போருக்கான விசேட பொதுக் கூட்டம்

(ஊர்காவற்துறை)

ஊர்காவற்றுறை கால்நடை அபிவிருத்திச் சங்கத்திற்குட்பட்ட, கால்நடை வளர்ப்போருக்கான விசேட பொதுக்கூட்டம் , நாளை மறுதினம் புதன்கிழமை காலை 10 மணிக்கு, ஊர்காவற்றுறை பிரதேச செயலக மண்டபத்தில் நடைபெறவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இக்கூட்டத்தில், மேற்படி சங்கத்தை, சட்டரீதியாக பதிவுசெய்தல் மற்றும் வெளிநாட்டு நிறுவன உதவிகளோடு முன்னெடுக்கப்படவுள்ள கால்நடை வளர்ப்போருக்கான ஊக்குவிப்பு நடவடிக்கைகள் தொடர்பான தீர்மானங்கள் எடுக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

எனவே - இப்பிரதேசத்திற்குட்பட்ட கால்நடை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள், புதிதாகச் சங்கத்தில இணைந்து, உறுப்புரிமம் பெற விரும்புவோர் மற்றும் கால்நடை வளர்ப்பில் ஆர்வம் உள்ளோரையும் இக்கூட்டத்தில் தவறாது கலந்து கொள்ளுமாறு சங்கச் செயலாளர் க.பரந்துவாசன் அறிவித்துள்ளார். (83)

### பரிசளிப்பு விழா

அளவெட்டி அருணோதயாக் கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு விழா, இன்று காலை 9.30 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கல்லூரி அதிபர் இ.மகேந்திரராசா தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில், பிரதமவிருந்தினராக வலிகாமம் வலயக் கல்விப்பணிப்பாளர் திருமதி றெஜினா இருதயநாதனும், சிறப்புவிருந்தினர்களாக - தெல்லிப்பளைக் கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் கா.சந்திரபாலனும், யாழ்.மாவட்ட கல்விக் கழகப் பொறுப்பாளர் கை.கவியன்பனும் கலந்து கொள்ளவுள்ளனர்.



மானிப்பாய் சோதிவேம்படி வித்தியாசாலையில் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டியில் - சிறப்பு விருந்தினராக கலந்துகொண்ட மானிப்பாய் மகளிர் கல்லூரி அதிபர் திருமதி. வி. பசுபதிப்பிள்ளை மங்கள விளக்கேற்றுவதையும், அருகில் நிகழ்வில் கலந்து கொண்டோரையும் படத்தில் காணலாம்.



யு.என்.எச்.சி.ஆர். அனுசரணையுடன் - போரூட் நல்லொழுக்க நிறுவனத்தினால், கடற்தொழிலாளர்களுக்கு வெளி இணை இயந்திரம் திருத்துவது தொடர்பான பயிற்சி வடமராட்சி கடற்றொழிலாளர் சங்கத்தில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் கலந்துகொண்ட உதவித் திட்ட இணைப்பாளர் டெனி, போரூட் அலுவலர்கள், கடற்தொழிலாளர் சமாசத்தின் செயலாளர் க.சூரியகுமார் ஆகியோரைப் படத்தில் காணலாம்.



யாழ்.கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரியில், மக்கள் வங்கியினால் மாணவர்களுக்கான 'சிசு உதான' கணக்கை ஆரம்பிக்கும் நிகழ்வு நடைபெற்றது. கல்லூரி அதிபர் வி.சிவசிதம்பரம், சிசு உதான கணக்கிற்குப் பொறுப்பான அலுவலர் வி.சிவச்சந்திரதேவன், பிராந்திய முகாமையாளர் எம்.கே. சிவபாதவிருதையர், ஆசிரியர் கே.உதயமூர்த்தி ஆகியோர் இடமிருந்து வலமாக இருப்பதைப் படத்தில் காணலாம். (116)

# திருமலையில் நரபலிக்காக சிறுவன் வெட்டிக்கொலை செய்யப்பட்டானா?

## பரிசோதனைக்காக உடற்பாகம் கொழும்புக்கு

நரபலிக்காக திருமலைப் பாடசாலை மாணவன் துண்டுதுண்டாக வெட்டிக்கொலை செய்யப்பட்டுள்ளான் என்பதை - இரசாயனப் பரிசோதனை மூலம் அறிவதற்காக, சிறுவனின் உடல் கொழும்புக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

திருகோணமலை - அன்புவெளிபுரம் பகுதியில் கடந்த 8 ஆம் திகதி மர்மமான முறையில் காணமற்போன டிலக்ஷன் ரோய் என்ற சிறுவன் கோரமாகக் கொலை செய்யப்பட்டுள்ளான். அவனது உடற்பாகங்கள் காட்டுப் பகுதியில் மீட்கப்பட்டுள்ளன.

மீட்கப்பட்ட உடல் திருகோணமலை வைத்தியசாலைக்கு கொண்டுவரப்பட்டு, இரசாயனப் பகுபாய்விற்காக - கொழும்பிற்கு நேற்றுமுன்தினம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

கோரமாக வெட்டிக்கொலை செய்யப்பட்ட அந்தச் சிறுவனை கடத்தியவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். எனினும், இந்தக் கொலை தொடர்பாக மர்மம் நீடித்து வருகிறது.

இந்தச் சிறுவன் கடத்தப்பட்டு, கொலை செய்யப்பட்மை தொடர்பாக, அன்புவெளிபுரத்திலும், திருகோணமலையிலும் - புனைகதைகளும், வதந்திகளும் வெகுவாக பரவியுள்ளன. நரபலிக்காக சிறுவன் கடத்தப்பட்டுள்ளான் என்ற சந்தேகம் மக்களிடையே பரவியுள்ளது. தங்களுடைய பிள்ளைகளைப் பாடசாலைக்கு அனுப்ப, பெற்றோர் அஞ்சுகின்றனர்.

இதேவேளை- சிறுவனின் கடத்தல் தொடர்பாக, சந்தேகத்தின் பேரில் ஒருவரை, விடுதலைப் புலிகள் கைது செய்து தடுத்து வைத்துள்ளதாகவும், இந்த நபர் பொலிஸாரின் விசாரணைக்கு தேவைப்படுவதால், உப்புவெளிப் பொலிஸிடம் இவரைக் கையளிக்கவேண்டும் எனவும், திருகோணமலை மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் கேட்டுள்ளார். கண்காணிப்புக் குழுப் பிரதித் தலைவரிடம் இந்த வேண்டுகோளை அவர் விடுத்துள்ளார்.

கண்காணிப்புக்குழுவினர், விடுதலைப் புலிகளிடம் தொடர்பு கொண்டுள்ளதாக தெரிவித்துள்ளனர்.

### அடிக்கல் நாட்டுவிழா

வட்டுக்கோட்டை வீயோடை இலுப்பையடி முத்துமாரி அம்மன் தேவஸ்தான இராஜகோபுர அடிக்கல் நாட்டுவிழா, இன்று காலை 10.15 மணிக்கு இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் யாழ்.பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறையைச் சேர்ந்த மா.வேதநாதன், பேராசியர் அ.சண்முகதாஸ், பிரதமகுரு கை. கிருஷ்ணகுமாரக் குருக்கள், தர்மகர்த்தா சபைத்தலைவர் சிவலிங்கம்ரகு, பொருளாளர் சி. வெற்றிவேலு, ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

### கூலிக்கு வந்தவன் நூல் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

கடந்த திங்கட்கிழமை ஆரியகுளம் சந்தியிலுள்ள - எழுத்தாளர் மண்டபத்தில், ச.வே.பஞ்சாட்சரம் அவர்களால் எழுதப்பட்ட "கூலிக்கு வந்தவன்" என்ற நாவல் வெளியிட்டு வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வு கலாநிதி க.குணராசா தலைமையில் இடம்பெற்றது. நூலின் முதற்பிரதியை கலாநிதி சி.சிவலிங்கராசா வெளியிட்டு வைத்தார்.

ராஜா யாழ்ப்பாணம்.
இன்று மட்டும் பிரசாந், கிரண், நடித்த வின்னர்
காட்சிநேரம் 10.30, 2.30, 6.30. 9.30 (பு.நே)
21 ஆம் திகதி மன்னன்
22,23 ஆம் திகதி எங்கவீட்டுபிள்ளை
24 ஆம் திகதி முதல் பிதாமகன்
(சி-1619)

நிறைஞ்சனாஸ் சங்கானை
விஜயகாந், சங்கீதா நடித்த அலெக்சாண்டர்
காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே.)
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 (பு.நே.)
WAR LOCK -II
(சி-1618)



மானிப்பாய் லியோ கழகத்தினால் அண்மையில் கட்டுடை சைவ வித்தியாலயத்தில் லியோக் கழக உறுப்பினர்களும், மாணவர்களும் சிரமதானத்தில் ஈடுபடுவதைப் படத்தில் காணலாம். (91)

# இடைக்கால நிர்வாகத் திட்டவரைபு குறித்து பிரபாகரனுக்கு தமிழ்ச்செல்வன் விபரிப்பு!



(கிளிநொச்சி)

**இடைக்கால நிர்வாக சபைக்கான நகல் திட்டத்தைத் தயாரிப்பதற்காக அயர்லாந்து சென்றிருந்த விடுதலைப் புலிகளின் அமைப்பின் அரசியற் துறைப்பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் தலைமையிலான குழு நேற்று முன்தினம் சனிக்கிழமை காலை வன்னி திரும்பியதையடுத்து, தேசியத் தலைவர் வே.பிரபாகரனுடன் இது தொடர்பான விரிவான பேச்சுவார்த்தைகளை நடத்தியதாகத் தெரியவருகின்றது.**

**நேற்றுமுன்தினம் காலை கிளிநொச்சி மத்திய கல்லூரி மைதானத்தில் விமானப் படையின் விசேட உலங்குவானூர்தி மூலம் வந்திறங்கிய தமிழ்ச்செல்வன், உடனடியாகவே தலைவருடனான ஆலோசனைக்காக அழைக்கப்பட்டதாக வன்னித் தகவல்கள் தெரிவிக்கின்றன.**



தலைவருடனான பேச்சுக்களின் போது, அயர்லாந்தில் சட்ட நிபுணர்களின் ஆலோசனையுடன் தயாரிக்கப்பட்ட நகல் திட்டத்தை தமிழ்ச்செல்வன் சமர்ப்பித்து, அது தொடர்பான விளக்கங்களைக் கொடுத்ததாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதனைவிட அயர்லாந்து, டென்மார்க், நோர்வே ஆகிய நாடுகளில் அரசியல் தலைவர்களுடனும், அரசாங்க அதிகாரிகளுடனும் நடத்திய பேச்சுவார்த்தைகள் தொடர்பான தகவல்களையும், தமிழ்ச்செல்வன் தலைவருக்கு விளக்கிக் கூறினார்.

தலைவருடனான தமிழ்ச்செல்வனின் இந்தச் சந்திப்பு நீண்ட நேரம் நடைபெற்றது. இடைக்கால நகல் திட்டத்தை அரசாங்கத்திடம் சமர்ப்பிப்பது தொடர்பாகவும், இருவரும் ஆராய்ந்ததாகத் தெரிகின்றது.

தற்போது தலைவரின் பரிசீலனையிலுள்ள இடைக்கால நிர்வாகத்துக்கான வரைபு, அவரது அங்கீகாரம் கிடைத்ததும் அரசாங்கத்திடம் சமர்ப்பிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது. அதற்கு முன்னதாக அடுத்த வார ஆரம்பத்தில் கிளிநொச்சியில் தமிழ்ச்செல்வன் பத்திரிகையாளர் மாநாடு ஒன்றை நடத்துவார் என எதிர்பார்க்கப்படுகின்றது.

அயர்லாந்து, டென்மார்க், நோர்வே ஆகிய நாடுகளில் தாம் நடத்திய பேச்சுவார்த்தைகள், இடைக்கால நிர்வாகசபைக்கான திட்டம் மற்றும் சமாதானப் பேச்சுவார்த்தைகள் தொடர்பான விபரங்களை அவர் விளக்குவார் என எதிர்பார்க்கப்படுகிறது. இதற்குப் பின்னரே புலிகளின் நகல் திட்டம் சமர்ப்பிக்கப்படும்.

இதேவேளையில் புலிகள் தமது யோசனைகளை இப்போது சமர்ப்பித்தாலும், சமாதானப் பேச்சுவார்த்தைகள் அடுத்த வருட ஆரம்பத்திலேயே மீண்டும் நடைபெறும் எனத் தெரியவருகின்றது.

அரசாங்கம் அதன் வரவு - செலவுத் திட்டத்தை நவம்பர் மாதமளவில் சமர்பிக்கவுள்ளது. அதனைத் தொடர்ந்து சுமார் ஒரு மாத காலத்துக்கு அது தொடர்பான விவாதம் நாடாளுமன்றத்தில் இடம்பெறும். பேச்சுவார்த்தைகளில் அரசாங்கத் தரப்புப் பிரதிநிதிகளாகக் கலந்து கொள்ளும் அமைச்சர்கள், வரவு - செலவுத் திட்ட விவாத காலத்தில் நாடாளுமன்றத்துக்கு சமூகமளித்திருப்பது அவசியமாகும். இதனைத் தொடர்ந்து - கிறிஸ்மஸ், புத்தாண்டு விடுமுறைகள் வருகின்றன. இதனாலேயே இடைநிறுத்தப்பட்டுள்ள சமாதானப் பேச்சுக்கள் ஜனவரி மாதத்திலேயே மீண்டும் ஆரம்பமாகும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

## நாடு பிளவுபடாத சமாதானத்தை உருவாக்குவதே எமது நோக்கம்!

### பிரதமர் ரணில் தெரிவிப்பு

(கொழும்பு)

நாடு பிளவுபடாத வகையில் சமாதானத்தை ஏற்படுத்தி, நாட்டு மக்களுக்கு மனநிறைவை உருவாக்குவதே தமது குறிக்கோள் என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

அத்துடன், மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை கருத்திற் கொண்டு, அவற்றுக்கு தீர்வுபெற்றுக் கொடுப்பதற்கு - தாமும் தமது அரசாங்கமும் தயாராக இருப்பதாக அவர் கூறினார்.

ஒவ்வொரு பிரதேச செயலாளர் பிரிவுகளிலும், இளைஞர் நிலையங்கள் உருவாக்க நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் பிரதமர் குறிப்பிட்டார்.

மேலும், விவசாயிகள் எதிர்நோக்கும் பிரச்சினைகளைத் தாம் அறிவதாகவும், அவை அனைத்தும் தீர்க்கப்பட்டு, நாட்டின் உற்பத்தியை அதிகரித்து, உற்பத்திச் செலவினங்களை குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இந்தச் செயற்பாடுகள் அனைத்தும் முறையாகச் செயற்படுவதற்கு, சமாதானம் அவசியம் என, பிரதமர் சுட்டிக்காட்டினார். சமாதானம் ஏற்படும் பொழுது - சர்வதேச சமூகத்தின் ஒத்துழைப்புடன், பல்வேறு பிரச்சினைகளுக்கும் தீர்வு காண்பதற்குரிய வாய்ப்பு ஏற்படுமென்றும் குறிப்பிட்டார்.

களுத்துறைப் பிரதேசத்தில் இடம்பெற்ற கூட்டத்திலேயே பிரதமர் இவ்வாறு தெரிவித்தார்.

## மட்டக்களப்பில் பொதுமக்கள் மீது படையினரின் கெடுபிடிகள் அதிகரிப்பு

மட்டக்களப்பில் பொதுமக்கள் மீதான கெடுபிடிகளைப் படையினர் அண்மைக் காலமாக அதிகரித்துள்ளனர். சைக்கிள்கள் மற்றும் மோட்டார் சைக்கிள்களில் பயணம் செய்பவர்களை, படையினர் அவர்களிடம் அனுமதிப்பத்திரங்களை கேட்டு சோதனை செய்வதோடு, வாகனங்களையும் துருவித் துருவி சோதனையிட்டு வருகின்றனர்.

அத்துடன் பாதசாரிகளின் பயணப்பொதிகளையும், படையினர் சோதனைக்கு உட்படுத்தி வருகின்றனர். இதேவேளை வவுணதீவு படையினரின் சோதனைச் சாவடியூடாக மட்டக்களப்பு நகருக்குச் செல்லும் மக்களின் அடையாள அட்டையும், அவர்களின் பயணப்பொதிகளும் படைத்தரப்பால் கடும்சோதனைக்கு உட்படுத்தப்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது.

போர் நிறுத்த உடன்படிக்கை ஊடான சமாதானச் சூழலில் படையினரின் இவ்வாறான நடவடிக்கைகள் குறித்து, அரச சார்பற்ற நிறுவனப் பணியாளர்கள் பாடசாலை ஆசிரியர்களும், மாணவர்களும் மற்றும் பொதுமக்களும் பலத்த அசௌகரியங்களைச் சந்தித்து வருகின்றனர்.

## வடக்கு - கிழக்கைப் புனரமைக்க ஐரோப்பிய நாடுகள் உதவி வழங்கும்

### ஒன்றியப் பிரதிநிதி வோர்டர் வில்டர் தெரிவிப்பு

(கொழும்பு)


இலங்கை சமாதான முன் எடுப்பு முயற்சிகளுக்கும் வடக்கு - கிழக்கு மாகாணத்தை மீளக்கட்டி எழுப்புவதற்கும், ஐரோப்பிய ஒன்றியத்தில் அங்கம் வகிக்கும் நாடுகள் மிகக் கூடுதலான உதவிகளையும், ஒத்துழைப்புகளையும் வழங்குமென அதன் பிரதிநிதி வோர்டர் வில்டர் தெரிவித்தார்.


அம்பாறை மாவட்ட ஊடகவியலாளருக்கான ஒலுவில் மகாபொல பயிற்சி நிலையத்தில் நேற்று இடம் பெற்ற கூட்டத்தில் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு உரையாற்றும் போது - முதற்கட்டமாக கிழக்கு மாகாண புகையிரத போக்குவரத்துச் சேவையை மீளக் கட்டியெழுப்புவதற்கும், மீன்பிடித்துறையை முன்னேற்றுவதற்கும் 62 மில்லியன் யூரோ நாணயங்களை ஐரோப்பிய ஒன்றியம் வழங்க இருப்பதாகவும் குறிப்பிட்டார்.

இலங்கையின் இனப்பிரச்சினையைத் தீர்ப்பதில் உலகநாடுகள் கூடுதலான அக்கறை செலுத்திவருகின்றன என்றும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

(07)





திருமலை - குரங்குபாஞ்சானில் முஸ்லிம்களை விவசாயம் செய்ய அனுமதிப்பது தொடர்பாக நடைபெற்ற சந்திப்பில் - பங்கேற்ற புலிகளின் திருமலை அரசியற்பொறுப்பாளர் திலக் உரையாற்றுவதை முதற்படத்திலும், சந்திப்பில் கலந்துகொண்ட புலிகள் மற்றும் முஸ்லிம்கள் தரப்பு பிரதிநிதிகளையும் படத்தில் காணலாம்.

## இராணுவ சமபலத்துடன் உள்ள நாங்கள் பலாத்காரமாக ஆட்களை சேர்க்கவில்லை

### மட்டு - அம்பாறை சிறப்புத்தளபதி ரமேஷ்



(மட்டக்களப்பு)

தமிழீழ விடுதலைப் புலிகள் சர்வதேச சட்ட வல்லுநர்களுடன் கலந்துரையாடி, இடைக்கால நிர்வாகசபை தொடர்பான பதில் வரைவை தயாரித்து உள்ளார்கள். அயர்லாந்தில் மேற்கொள்ளப்பட்ட தீர்மானங்கள் தேசியத் தலைவரின் பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்பட்டு, அவரின் பரிந்துரையையடுத்து இறுதிவடிவம் பெற்றபின்பே அரசிடம் கையளிக்கப்படும்.

சர்வதேச நியமங்களின் பிரகாரம் அவர்கள் ஏற்கக் கூடியதாக இந்த திட்டவரைபு தயாரிக்கப்படுவதே தாமதமடையக் காணரம் என்று, தமிழீழ விடுதலைப்புலிகளின் மட்டக்களப்பு - அம்பாறை மாவட்ட சிறப்புத் தளபதி ரமேஸ் தெரிவித்தார்.

கரடியனாறு தேனகம் விடுதியில் புலிகள் அமைப்பில் இணைந்த சிறுவர்களை, பெற்றோரிடம் ஒப்படைக்கும் நிகழ்வையடுத்து ஊடகவியலாளர்களிடம் கருத்து தெரிவிக்கையில் அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

நாம் கையளிக்கவுள்ள இடைக்கால வரைபை, அரசாங்கம் நிராகரித்தால், சர்வதேச சமூகத்திற்கு உரிய காரணங்களைத் தெரிவித்தேயாக வேண்டும். சமாதானப் பேச்சுவார்த்தையைக் குழப்பும் நோக்கம் தலைமைக்கு ஒரு போதும் இல்லை. அரசாங்கம் குழப்பினால் ஐ.நா. சபையின் கவனத்திற்கு கொண்டு செல்வோம். இனிமேல் யுத்தத்தை நாமாகத் தொடங்கமாட்டோம்.

நாம் போர்நிறுத்த ஒப்பந்தத்தை பலமான நிலையில் இருந்தே ஒப்பமிட்டோம். இராணுவ சமபலத்துடன் உள்ள நாம் பலாத்காரமாக ஆட்களைச் சேர்க்கவில்லை. ஆனால் ஊடகங்கள் போர்நிறுத்த ஆரம்பத்திலிருந்தே தீவிர பிரசாரங்களை முடுக்கிவிட்டுள்ளன.

பலமான நிலையில் உள்ள நாம் பலாத்காரமாக ஆட்களை சேர்க்கவேண்டிய அவசியம் இல்லை. எமது இயக்கம் கட்டுக்கோப்பும், கொள்கைப்பற்றுமுள்ள விடுதலை இயக்கமாகும். போராடுவதற்கு மண்பற்றும், விடுதலை உணர்வும் தேவை. பலாத்காரமாக சேர்ப்பவர்களால் சண்டையிட முடியாது.

நாம் விரும்பி வரும் சிறுவர்களை பலாத்காரமாக வீட்டிற்கே அனுப்பிவிடுகிறோம். அல்லது ஆலோசனை வழங்கி பெற்றோர்களை அழைத்து ஒப்படைக்கிறோம்.

இராணுவ ரீதியில் வெற்றிபெற்ற நிலையிலேயே பேச்சுவார்த்தையில் ஈடுபடுகிறோம். ஆட்களைச் சேர்க்கவோ அல்லது அதற்கான பிரசாரங்களை மேற்கொள்ளவோ வேண்டிய தேவை எமக்கில்லை என்றும் சிறப்புத்தளபதி ரமேஷ் குறிப்பிட்டார்.

# கரையோரப்பகுதிப் பாதுகாப்பைக் காரணங்காட்டி

# இறங்குதுறையை ஆழப்படுத்த படையினர்தடை

## மீனவர் சமாசம் குற்றச்சாட்டு

கரையோர வளங்களைப் பேணிப் பாதுகாக்கப் பங்களிப்பதாகக் கூறிக் கொள்ளும் படைத்தரப்பு - தமது நலன்களுக்காகக் கரையோரப் பகுதிகளிலுள்ள முருகைக்கற்களை அகற்றி வருவதாக, வடமராட்சி வடக்கு மீனவ சங்கங்களின் சமாசம் குற்றஞ்சாட்டியுள்ளது.

வடமராட்சி வடக்கின் கெருடாவில் முதல் - தும்பளை கிழக்கு வரையான கரையோரப் பகுதிகளிலுள்ள மீன்பிடி இறங்குதுறைகளை ஆழப்படுத்த, படைத்தரப்பு தொடர்ந்தும் அனுமதி மறுத்து வருகின்றது.

இப்பகுதிகளில் உள்ளதாகத் தெரிவிக்கப்படும் 27 இற்கும் அதிகமான மீன்பிடி இறங்குதுறைகளை, கரையோரப் பாதுகாப்பைக் காரணங் காட்டியே ஆழப்படுத்த படைத்தரப்பால் அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

ஆனால், இந்த இறங்குதுறைகளை ஆழப்படுத்த - மீனவர்களுக்கு அனுமதி மறுத்துவரும் படையினர் - இன்பருட்டி மற்றும் பருத்தித்துறை துறைமுகப்பகுதிகளில், கடலினுள் அமைந்துள்ள தமது பாதுகாப்பு நிலைகளைப் பலப்படுத்த, அந்தப் பகுதிகளிலுள்ள முருகைக் கற்களை அகற்றி வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதனால், கடல்நீர் உட்புகுந்து, இந்தப் பகுதிகளில் கடலரிப்பு இடம்பெறலாமெனவும் கூறப்படுகின்றது.

இது தொடர்பாக வடமராட்சி வடக்கு மீனவ சங்கங்களின் சமாசச் செயலாளர் க.சூரியகுமாரன் கருத்துத் தெரிவிக்கையில் -

தற்போது ஏற்பட்டுள்ள சுமுக நிலையையடுத்து, இந்தக் கடற்பரப்பில் பெருமளவான மீன்பிடிப் படகுகள் தொழிலில் ஈடபட்டுள்ளதாகவும், அந்தப் படகுகள் கரைதிரும்ப வசதியாக, குறித்த இறங்குதுறைகளை ஆழப்படுத்துவதற்கான அனுமதியைத் தாம் கோரியிருந்ததாகவும் தெரிவித்தார்.

எனினும், பாதுகாப்பைக் காரணங்காட்டி, அதற்கான அனுமதியை வழங்குவதற்குப் பின்னடித்துவந்த நிலையில், மீனவர்கள் தன்னிச்சையாக இறங்குதுறைகளை ஆழப்படுத்த முற்பட்டிருந்தனர்.

இந்தநிலையில் எழுந்த முறுகல நிலைமையையடுத்து, பருத்தித்துறை அதியுயர் பாதுகாப்பு வலயப்பகுதியில் அமைந்துள்ள 52-4 படைத்தளத்தில் கூட்டமொன்று கூட்டப்பட்டிருந்தது. போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் முன்னிலையில் இடம்பெற்ற இந்தக் கூட்டத்திற்கு, மீனவ சங்க பிரதிநிதிகளும் அழைக்கப்பட்டிருந்தனர்

இந்தக் கூட்டமுடிவில், அனைத்து இறங்குதுறைகளையும் ஆழப்படுத்துவதற்கான அனுமதியை வழங்குவதாக, படை அதிகாரிகள் அறிவித்திருந்தனர். உயர் பாதுகாப்பு வலயப்பகுதிகளுக்கு வெளியேயுள்ள இறங்குதுறைகளை ஆழப்படுத்தலாமென, பலாலியிலுள்ள யாழ்.படைத்தலைமையும் - யாழ்.அரச அதிபருக்கு அறிவித்திருந்தது.

எனினும், இந்த இறங்குதுறைகளை ஆழப்படுத்துவது தொடர்பாக, கரையோர வளங்கள் பாதுகாப்புத் திணைக்களத்திடமிருந்து உரிய சிபார்சினைப் பெற்றபின்னரே, ஆழப்படுத்துவதற்கான அனுமதியை வழங்க முடியுமெனப் படைத்தரப்பு தற்போது மீனவர்களுக்கு அறிவித்துள்ளது.

(202)

## உரிமத்தகடுகள் விநியோகம்

நெடுந்தீவுப் பிரதேச எல்லைக் குட்பட்ட துவிச்சக்கர வண்டிகள், மாட்டுவண்டில்கள் ஆகியவற்றுக்கான 2003 ஆம் ஆண்டுக்குரிய உரிமத்தகடுகள் - நெடுந்தீவுப் பிரதேசசபையினால் வழங்கப்பட்டு வருகின்றது.

2003 ஆம் ஆண்டுக்கான உரிமங்களை - எதிர்வரும் 22 ஆம் திகதிக்குள் சகலரும் பெற்றுக்கொள்ளுமாறு, நெடுந்தீவுப் பிரதேசசபை விசேட ஆணையாளர் அறிவித்துள்ளார்.

(113)

# 'வித்தகம்' சஞ்சிகை வெளியீட்டு விழா

(யாழ்ப்பாணம்)

உயர் தொழில்நுட்ப நிறுவனத்தால் வெளியிடப்படும் "வித்தகம்" சஞ்சிகை இதழ் 2 இன் வெளியீட்டு விழா- எதிர்வரும் 20 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 10.00 மணிக்கு நிறுவன கேட்போர்கூடத்தில் இடம்பெறவுள்ளது.

மாணவர் ஒன்றியதலைவர் ப.ஜெயதீசன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்விற்குப் பிரதம விருந்தினராக, யாழ்.மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி கலந்து சிறப்பிக்கவுள்ளார். சிறப்பு விருந்தினர்களாக- நாடாளுமன்ற உறுப்பினர் மாவை. சேனாதிராஜா,கல்வி மேம்பாட்டு பேரவை செயலர் எஸ்.கமலநாதன், உயர் தொழில்நுட்ப நிறுவன பணிப்பாளர் ரி.இராஜரட்ணம் ஆகியோரும் கலந்துகொள்ளவுள்ளனர்.

(25)

# நெடுந்தீவு பெரியவெட்டுக்கழி குளம் புனரமைக்கப்படவுள்ளது

நெடுந்தீவு சீக்கிரியாம் பள்ளம் பகுதியில் அமைந்துள்ள பெரியவெட்டுக்கழிக்குளம் - உலக வங்கியின் நிதியுதவியுடன் ஒதுக்கீடு புனரமைக்கப்படவுள்ளது.

இதற்கான ஆரம்ப நடவடிக்கையாக நீர்பாசனத் திணைக்கள அதிகாரிகள் கடந்த 5 நாட்களாக குளத்தினது அளவுகள் மற்றும் மேற்கொள்ளப்படவேண்டிய வேலைகள் போன்றவற்றிற்கான மதிப்பீட்டறிக்கையினை தயாரிக்கும் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

இக்குளம் அடுத்த ஆண்டு புனரமைக்கப்படுமாயின், கோடை காலங்களில் அப்பகுதி மக்கள் அனுபவிக்கும் உவர்ப்புழுதித் தொல்லை நீக்குவதுடன், மழைநீர் சேகரிப்பின் மூலம் தீவில் ஏற்படும் நன்னீர் தட்டுப்பாட்டுக்கும் விரைவில் தீர்வு கிடைக்கும் என்பது குறிப்பிடத்தக்கது.

(113)

# சங்ஸ்தா கிண்ணத்துக்கான உதைபந்தாட்ட சுற்றுப்போட்டி

(யாழ்ப்பாணம்)

இலங்கைப் பாடசாலைகளில் உதைபந்தாட்டச் சங்கம் நடத்தும் "சங்ஸ்தா" வெற்றிக்கிண்ண உதைபந்தாட்டப்போட்டி - பாடசாலைகளின் 19 வயதுப் பிரிவினர்களுக்கிடையில் நடத்தப்படவுள்ள்து. இதற்கான யாழ்.மாவட்டத் தெரிவுப் போட்டிகள் நாளையும், நாளை மறுதினமும் - யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி விளையாட்டு மைதானத்தில் நடாத்தப்படவுள்ளன. இவற்றுக்கான அணித்தெரிவு இன்று காலை 10 மணிக்கு யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் நடைபெறும்.

இந்த நிகழ்வில் கலந்துகொள்ள விரும்பும் பாடசாலை அணிகள்- உரிய விண்ணப்பப் படிவத்தைப் பெற்று விண்ணப்பிப்பதுடன், வீரர்களுக்கான இலங்கைப் பாடசாலைகளின் உதைபந்தாட்டச் சங்கத்தின் அடையாள அட்டையை பெற்றுக் கொள்ளவேண்டும்.

இவற்றுக்கான படிவங்களையும், விதிகளையும் போட்டியின் இணைப்பாளர் வீ.எஸ்.மகேந்திரனிடம் - (யாழ்.மத்திய கல்லூரியில்) பெற்றுக்கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்.மாவட்டத்தில் தெரிவு செய்யப்படும் ஒரு அணி மட்டுமே, அகில இலங்கைப் போட்டியில் பங்குபற்றத் தகுதி பெறும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.



கரவெட்டி மாணிக்கவாசகர் வித்தியாலயத்தில் நடைபெற்ற வாய்மொழி, ஆங்கில பயிற்சிநெறி சான்றிதழ் வழங்கும் வைபவத்தில், வித்தியாலய அதிபர் இ.இராகவன் உரையாற்றுவதையும், வடமராட்சி கல்விக்கழகப் பொறுப்பாளர் தாயகன், வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வி.ரி. செல்வரத்தினம் ஆகியோரையும் படத்தில் காணலாம்.



புன்னாலைக்கட்டுவன் ஈவினை அமெரிக்கன் தமிழ்க் கலவன் பாடசாலை கலைவிழாவில் - மாணவர்கள் கலைநிகழ்வில் பங்குபற்றி நடனமாடுவதைப் படத்தில் காணலம்.

## சின்னஞ்சிறு செய்திகள்

### முன்பள்ளி விளையாட்டு விழா

(யாழ்ப்பாணம்)

நெடுந்தீவு மத்தி சென்.ஜோன்ஸ் முன்பள்ளி சிறார்களின் வருடாந்த விளையாட்டுப்போட்டி - நாளை மறுதினம் புதன்கிழமை மாலை 3.00 மணியளவில் புனித யுவானியார் ஆலய மைதானத்தில் நடைபெறவுள்ளது.

நெடுந்தீவு மத்தி சனசமுக நிலையத் தலைவர் எ.எட்மன் ராஜ்குமார் தலைமையில் நடைபெறும் இந்த நிகழவில், பிரதம விருந்தினராக நெடுந்தீவு பங்குத்தந்தை அருட்திரு ஜெபநேசரட்ணம் அடிகளார் கலந்துகொள்ளவுள்ளார்.

(113)

### நிலையறி பரீட்சை மதிப்பீட்டுப் பகுப்பாய்வு

(புன்னாலைக்கட்டுவன்)

ஊர்காவற்றுறை கல்விக் கோட்டப் பாடசாலைகளில், தரம் 3 மாணவர்களுக்கு நடத்தப்பட்ட நிலையறி பரீட்சை மதிப்பீடு தொடர்பான பகுப்பாய்வு - நாளை காலை 8.30 மணிமுதல் பி.ப. 2.30 மணிவரை, ஊர்காவற்துறை கல்விக்கோட்டப் பணிமனை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பகுப்பாய்வில் பங்குபற்றும் ஆசிரியர்கள் - நிலையறி பரீட்சை விடைத்தாள்கள் மற்றும் பாடசாலைமட்டப் பகுப்பாய்வுப் படிவம் என்பவற்றைத் தவறாது கொண்டு வருதல் வேண்டும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (83)


வாழ்க வளமுடன்

இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

நான்காவது அகவையில்



பெயர் : ந.கிஷோத்
முகவரி : இலகடி, வலந்தலை, காரைநகர்.

ஆறாவது அகவையில்

பெயர் : ம.திருஷன்
முகவரி : பூநாறி லேன், கொக்குவில்.



ஏழாவது அகவையில்



பெயர் : யோ. ஜனனி
முகவரி : தில்லையம்பதி, கோண்டாவில்.

பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகிறோம்

வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர்:------------------------------

முகவரி :------------------------------

பிறந்த ஆண்டு:------------------------------

கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

..............................
பெற்றோர் ஒப்பம்

# இலக்கியச்சோலை

# கண்ணம்மாவும் செல்வாள்

சிறுகதை

மூன்றாம் பரிசு சிறுகதை

கண்ணம்மா கல்லில் உட்கார்ந்தபடி தூரத்தே வெறித்துப் பார்த்துக்கொண்டிருந்தாள். மாடுகள் வால்களை "சுழற்றி", ஈக்களை விரட்டியபடி புல் மேய்ந்து கொண்டிருந்தன. இடையே பலமாக வீசிய காற்று, புழுதியை வாரிக் கொட்டி, அவள் கண்களைக் கசக்க வைத்தது.

பிரதான வீதியின் இடதுபக்கத்தில் அமைந்துள்ள கிருஷ்ணன் கோயிலில் திருத்த வேலைகள் நடந்து கொண்டிருந்தன. கோயிலின் எதிர்ப்பக்கத்தில் இருந்த அரசமரத்தடியில், கடலை விற்கும் பகவதி ஆச்சி - மதிய நேரமாதலால், கடகத்தை உரப்பையொன்றினால் மூடி விட்டு, அரசமரவேரில் தலைவைத்துத் தூக்கம் போட்டுக் கொண்டிருந்தாள்.

வீதியில் இப்போது அதிகமாக விரைந்து ஓடும் "ஹயஸ்" வாகனங்கள்... அந்தச் சூழலின் அமைதியைக் குலைத்தது. கண்ணம்மாவுக்கு இந்த அமைதிச்சூழல் மிகவும் பழக்கமாகிவிட்டது. அவளுக்கு விளக்கம் தெரிந்த நாளிலிருந்து அவள் இப்போது உட்கார்ந்திருக்கும் கல், இதே இடத்தில் தான் இருந்து வருகின்றது.

அவளுக்கு நேரம் கிடைக்கும் போதெல்லாம் இங்கே வந்து, இருந்து விடுவாள். கொட்டிலில் அவளைக் காணாது விட்டால், எங்கும் அலைந்து திரியமாட்டார்கள்.


"என்னம்மா! கண்ணம்மாக்குட்டியைக் காணேல்லை?

"அவ எங்க போகப்போறா... அந்தக் கல்லுக்கு மேலே தான் போய் இருப்பா... பெட்டைக்கு அதில இருக்கிறதில சரியான பனி..."

"பெரிசா ஆக்களோட கதைக்கமாட்டாள்."

"ஆள் ஒரு தனிப்போக்குத்தான்"

"என்ன படுக்கிற நேரமாச்சு, கண்ணம்மாவைக் காணேல்ல. போய்ப் பார்த்தால் அந்தக் கல்லின் மேல் அருண்டபடி நித்திரை கொண்டிருப்பாள்.



பேத்தியார்க் கிழவி கற்பகம்-அவளைத் தூக்கிக் கொண்டுவந்து, கொட்டிலின் உள்ளே படுக்கவைப்பாள். பள்ளிக்கூடம் போவது அவளைப் பெறுத்தவரை பெரிய விஷயமல்ல... வீட்டுச் சூழல் அவளுக்குச் சாதகமாக இருந்தால்... பள்ளிக்குப் போவாள். மற்றும்படி பள்ளி என்பது அவளுக்கு எட்டாத தூரம்தான்.

வழமைபோல் கல்லின் மேல் இருந்தபடி மேயும் மாடுகளைப் பார்த்துக்கொண்டிருந்தாலும், சிந்தனை எதையோ... நினைத்து... சுழன்றுகொண்டிருந்தது.

தான் பிறந்தது எங்கே? வளர்ந்தது எங்கே...? அப்பா இல்லை... அதை நினைக்க இப்போது அவளுக்குத் தொண்டை அடைத்தது... விறகு வெட்டக் காட்டுக்குச் சென்றவர்கள் - வீடு திரும்பும்போது... பிணமாக... அதில் அப்பாவும் ஒருவராக...

காற்றுப் புழுதியைக் கிளப்பி அடித்தது. இங்கு எங்கு பார்த்தாலும், எத்தனை கொட்டில்க்ள் இருக்கின்றன. எல்லாம் ஒரேமாதிரியாக... எல்லாக் கொட்டில்களும் பெரிய... "தறப்பாளினால்" சுற்றிக்கட்டப்பட்டுள்ளன... வரும் மழை காலத்தில் ஒழுகாமல் இருக்கலாம்.

அன்று பெரிய வெள்ளை வெளேரென்ற வாகனங்களில் புழுதியைக் கிளப்பியபடி வந்தவர்கள்தான், எல்லாக் கொட்டில்களிலும் இருக்கும் குடும்பங்களுக்கு இதைக் கொடுத்துவிட்டுப் போனார்கள்.

இப்படியாக "வெள்ளை வெளேரென்ற" வாகனங்கள் வரும்போது, எங்கள் இடம் பெரிதாக அமளிப்படும். எல்லாக் கொட்டில்களில் இருந்தும் அனைவரும் வெளியே வந்துவிடுவார்கள். இந்த வாகனங்களின் இரைச்சல் அவர்களுக்குப் பழக்கமாகிவிட்டது. நாய்களும் தம் பாட்டுக்குக் குரைத்துவிட்டு, பின் 'அட இவையளே' என்றரீதியில் சுருண்டு படுத்துவிடும்.

எவ்வளவு தடவைகள் எத்தனை விதமான மனிதர்கள் வந்து போய்விட்டார்கள். இப்போதெல்லாம் அவர்களைக் கண்டவுடன் முன்பு ஏற்பட்ட அச்சம், வெட்கம் எல்லாம் இல்லாமல் போய்விட்டது. அவர்களில் சிலர் "என்ன எல்லோரும் சௌக்கியமாய் இருக்கிறீங்களா?" என்று தமிழில் கேட்கிறார்களே..?

எத்தனை விசாரிப்புக்கள், நீண்ட சம்பாஷணைகள்... கூட்டமாக இருத்திப் படம் எடுத்தல் - பாய், அரிக்கன் லாம்பு, சில்வர் பாத்திரங்கள், நிவாரணப் பொருட்கள், நுளம்பு வலைகள், குழாய்க்கிணறு வெட்டிக் கொடுத்தல், மலசலகூடம் அமைத்தல், கல்வி வசதி...

எல்லாமே இப்போது அவளுக்குத் தெரியும்.

கொட்டில்களில் வசிப்போரை, வெளியே இருக்கச் சொல்லிவிட்டு, "வெள்ளைக்காரப் பிரதிநிதிகள்" பெரிதாக ஏதோ சொல்லிக் கொண்டுபோக... எமது தமிழ் சகோதரர்கள் அதனை அழகாகத் தமிழில் மொழிபெயர்ப்பார்கள்.

எல்லோரும் அதைப் பொறுமையாகக் கேட்டுக்கொண்டிருப்பார்கள். நாய்கள்கூடக் கொஞ்சம் உறுமிவிட்டு, பின் பேசாமல் காதைக் கொடுத்துக் கேட்டுக்கொண்டிருக்கும்.

இடையில் ரீவியில் படம்காட்டிவிட்டுப் போவார்கள். எல்லாமே சுகாதாரம், நோய்கள் எனப் பல்வேறு வகையாக இருக்கும். சில படங்கள் முன்னமே பார்த்த படங்களாக இருக்கும்.

கண்ணம்மாவுக்குச் சினம் வரும். மனத்தில் கேள்விகள் கோபத்துடன் பொங்கியெழும்.

"என்னத்துக்கு இவை நெடுக வந்து போய்க்கொண்டிருக்கினம். இங்க இருக்கிற ஆக்களை ஊத்தை ஆக்களெண்டு நினைக்கினமோ.. சாமான்களைக்கொண்டு வருகினம். பின் கொடுத்துவிட்டுப் போயினம். எல்லோரும் சுத்தமாய் இருக்க வேணுமெண்டு சொல்லினம்...

அப்ப நாங்களெல்லாம் இவை நினைக்கிற மாதிரி, இவை தாற சாமான்களை நெடுக வாங்கிக்கொண்டிருக்கிற ஊத்தையாக்களே..."

கண்ணம்மா பிறப்பிலிருந்து இந்த ஆர்ப்பாட்டங்களைப் பார்த்துக்கொண்டுதான் இருக்கிறாள். வாகனங்களில் எழுதப்பட்டிருக்கும் எழுத்துக்கள் என்னவென்று அவளுக்குத் தெரியவில்லை. எல்லாமே பெரிய எழுத்துக்கள்.

ஆனால், அதிலிருந்து இறங்கி வெளியேவரும் "சிகப்புத் தோல்"காரர்களை- "இங்கிலீசுக்காரர்கள், வெள்ளைக்காரர்கள்" என்று அழைப்பது அவளுக்குத் தெரிந்திருந்தது... சிவப்புத் தோல் பெண்களைக்கண்டால் - ஆண்கள், பெண்கள் அனைவரும் வெட்கப்படுவார்கள்.

கண்ணம்மாவிடம் கேள்வி கேட்டார்கள்.

**What is your name?**

..............................

**Do you like this place?**

..................................

**How long do you live here?**

..........................................

அவர்களின் கேள்விகள் கண்ணம்மாவைக் குழப்பியடித்தது. பக்கத்திலிருந்த அதிகாரிகள் அந்தக் கேள்விகளைத் தமிழில் மொழிபெயர்த்தபோது, அவள் மனதில் சில சந்தேகங்கள் தோன்றின.

"இந்த இடம்தான் என்ன?

அடிக்கடி பேச்சில் முகாம்... முகாம் என்று எங்களைக் குறிப்பிட்டுச் சொல்கிறார்களே.

என்ன இது?

தெருவில் வேடிக்கை பார்க்க நின்றாலும், போவோர் வருவோரும் இப்படித்தான் கேட்பார்கள்."

"இந்த முகாமிலா இருக்கிறாய்?"

பக்கத்தில் எங்கேயாவது களவு, கொள்ளைபோனால் உடனேயே இங்க வந்து எல்லோரையும் மிரட்டி எடுப்பார்கள். எல்லோரும் நடுங்கியபடியே இருப்போம்.

"இது என்ன இடம்?"

"ஊர் இல்லையா? கிராமமில்லையா?"

வேறை என்ன?

உங்கள் கஷ்ரம் எங்களுக்குப் புரிகின்றது. உங்கள் உணர்வுகள் எங்களுக்குத் தெரியும். எவ்வளவு காலமாய்ச் சொந்த ஊர், வீடு வாசல் நிலங்களைவிட்டு, இடம் பெயர்ந்து முகாமில் அகதி வாழ்க்கை வாழ்ந்துகொண்டு இருக்கிறியள்.

"என்ன சொல்கின்றார்கள்?"

நாங்கள் பல வருசங்களாக அகதிவாழ்க்கை வாழ்கிறோமா? இது எங்களது சொந்த இடம் இல்லையா?

இங்கே எங்களைச் சுற்றிக் கொட்டில்களில் இருப்பவர்கள் எல்லோரும் - வீடு வாசல்களைவிட்டு வந்தவர்களா?

எங்களது சொந்த ஊர் எங்குள்ளது?

நாங்கள் அங்கு போகமுடியாதா?"

நாடி நரம்பெல்லாம் கேள்விகள் புகுந்து குடையத் தொடங்கியது. கண்ணம்மாவுக்குத் தலைக்குள் ஏதோ செய்வது போலிருந்தது. பேத்தியார்க்கிழவி கற்பகத்திடம் ஓடிச்சென்று கேள்வியால் துளைத்தாள்.

"அப்பம்மா... இது... எங்கட இடமில்லையா?"

"ஏன் அப்பம்மா... நாங்கள் எங்கட வீடு போகாமல், இங்க இருக்கிறம்?"

"ஏன் அங்க போகேலாது?"

கற்பகம் திகைத்தாள், கலங்கினாள். எப்படி இதற்கு விடை சொல்வது? அது போகவே முடியாத இடமெண்டு சொல்வதா?

அங்கே பேய், பூதங்கள் வசிக்கின்றன. போனால் பிடித்துவிடும் என்று சொல்வதா? அல்லது ஆரம்பத்திலிருந்து "பிஞ்சுக்கு" நடந்ததெல்லாம் சொல்வதா? பொய் சொல்லக்கூடாது.

கற்பகம் - கண்ணம்மாவை மடியில் இருத்தினாள். குழிக்குள் உருண்டு கொண்டிருந்த கண்கள், ஒளி வீசத்தொடங்க... அவள் சிந்தனை மெல்ல மெல்லப் பின்நோக்கி நகர்ந்தது...

அந்தப் புகழ்பூத்த கிராமம்... சிவகாமி அம்மன் கோயிலடி... பின் வீதியிலிருந்த மகிழமரம், குதியும் கும்மாளமுமாகச் சிறுவர்கள் கூட்டம்... ஊரை இரண்டாகப் பிரிக்கும் புகையிரதத் தண்டவாளம்... மத்தியில் அமைந்த புகையிரதநிலையம்... புகையிரதம் வந்துபோகும் நேரத்தைக் கணித்து, காரியம் ஆற்றும் கிராமமக்கள்... பரந்த நிலப்பரப்பில் செறிந்து நிற்கும் புகையிலை, மிளகாய், வெங்காயம்... வீடுகளைச் சோலையாக்கும் மா, பலா, வாழை, கமுகு... தாகத்துக்குக் கிணற்றுநீரை அள்ளிக் குடிக்கக் குடிக்க அடங்காத ருசி.

பெரிய நாற்சார் வீடு... அதில் உலாவித் திரியும் அப்பா, அம்மா, சகோதரர்கள், உறவினர்கள்... புத்தகப் பையைத் தூக்கிக்கொண்டு ஓடியோடிப் படிக்கும் பள்ளிக்கூடம், வாசகசாலை... எல்லாம்... எல்லாம்...

அதிகாரப்பேயினால் நாம் விரட்டியடிக்கப்பட்டு, துரத்தியடிக்கப்பட்டு... உறவுகள் சிதறுண்டு... கற்பகம் மறைக்காமல் சொன்னாள். நாங்கள் மீளக்குடியமர்வதற்கு நடாத்தப்படும் போராட்டங்களுக்குப் போவதாகக் கூறினாள். தாங்கள் சொல்லும் கோஷத்தைச் சொன்னாள். அவளிடமிருந்து நீண்டபெருமூச்சு அனலாக வெளிப்பட்டது.

"அப்பம்மா! எனிமேல் நீங்கள்- என்னையும், நீங்கள் போற கூட்டத்துக்குக் கூட்டிக்கொண்டு போங்கோ"

"குஞ்சு... நீ... அங்க என்ன செய்யப்போகிறாய்?"

"நான் எங்கட வீட்ட போறன்... நீங்கள்.... அவள் கூச்சலிட்டுச் சொன்னாள்.

(யாவும் கற்பனை)

சி.கதிர்காமநாதன்

# நூல் அகம்

## நெஞ்ச நெருடல்




'நெஞ்ச நெருடல்' இது கவிதைத் தொகுதியின் பெயர். இந்தக் கவிதைத் தொகுப்பின் ஆசிரியர் இணுவிலைச் சொந்த இடமாகக் கொண்ட சக்திதாசன். தற்போது இவர் டென்மார்க்கில் வாழ்ந்து வருகின்றார். சக்திதாசனின் ஐம்பது கவிதைகளைத் தாங்கி 'நெஞ்ச நெருடல்' வெளிவந்துள்ளது. இணுவில் பொது நூலக இலக்கிய வட்டம் - இந்தக் கவிதைத் தொகுப்பை வெளியிட்டுள்ளது.

என்னுடைய புலம்பெயர் வாழ்வுக்கும், என் கவிதைப் பயணத்திற்கும் வாழ்வு ஒன்றாக இருக்கின்றது. எனினும், ஏன்னுடைய கவிதைகளைத் தொகுக்க எடுத்தகாலங்கள் - 12 வருடங்கள் என்று ஆசிரியர் சக்திதாசன் குறிப்பிடுகின்றார். சொந்த இடத்தை விட்டு, புலம்பெயர்ந்து வெளிநாட்டில் வாழ்ந்துகொண்டு வருகின்றவர்கள் பலராவர். இவர்களில் குறிப்பிட்டுச் சொல்லக்கூடியளவில் இலக்கியப் பணியொன்றைச் செய்த திருப்தி அவர் முன்னுரையில் தெரிகின்றது.

'நெஞ்ச நெருடல்' என்ற கவிதையில் ஈழநாட்டினதும், வன்னிவாழ் மக்களது எழுச்சியும், ஐரோப்பாவில் வாழ்கின்ற மக்களின் இருண்ட மனமும் புலப்படுத்தப்படுகின்றன. சோகத்தில் நாம் மாய்ந்துபோகாது, மீண்டும் தளிர்த்துத் தாய்மண்ணுக்குப் பலனளிக்கும் வகையில் வாழவேண்டுமென்ற ஆர்வத்தையும், துடிப்பையும் காண்கின்றோம் என்ற நிலக்கிளி அ.பாலமனோகரனின் வார்த்தைகளில் உண்மையிருப்பதாகவே தெரிகின்றது.

சக்திதாசன் தன்னுடைய கவிதைத் தொகுப்பினை- தனக்குச் சக்திகொடுத்த தன் தாய்க்குச் சமர்ப்பணம் செய்கின்றார். தன்னுடைய சிறுவ்யது ஞாபகங்களை மீட்டிப் பார்த்து, அவை 'மீண்டும் வருமா' என்ற ஏக்கப்பெருமூச்சு விடுகின்றார். அவர் விடுகின்ற பெருமூச்சு எமது நெஞ்சங்களிலும் நெருடல்களாக அமைகின்றன.

'எப்போது வரும் நிம்மதி', 'வசந்தத்தைத் தேடி', 'ஏங்குது பாசமரம்', 'உறவுதேடி', 'ஏக்கம்' முதலான கவிதைகளில் சக்திதாசனின் தாய்நாட்டு ஞாபகங்கள் துளிர்விடுகின்றன.

**'தேடிய தேட்டங்கள்**
**சந்ததிக்கு இருந்தும்**
**தேடிக் கொண்டிருக்கிறோம்**
**நிம்மதியை'.**

என்னும் கவிதை சக்திதாசனின் 'நெஞ்ச நெருடலில்' ஒன்றாகும்.

'பார்வையிழந்த கிளி', 'ஏமாந்த மழைத்துளி', 'அங்கும் இங்கும்', 'மனமிணையா வாழ்வு', 'நீயில்லாத சுகமேது' போன்ற கவிதைகளில் புலம்பெயர்ந்து வாழ்ந்து கொண்டிருக்கும் நாடுகளில்கூட, தம்முடைய தாய்நாட்டின் நினைவோடுதான் வாழந்து கொண்டிருக்கின்றோம் என்ற உணர்வு வெளிப்பட்டு நிற்பதைக் காணக்கூடியதாகவுள்ளது.

'சரி சமமாய்' என்ற கவிதையில் ஆண் - பெண் சமத்துவத்தைப் பற்றிக் கவிஞர் எடுத்துரைக்கின்றார். 'பசுமை தந்த இணுவை', 'ஆனந்தத் திருக்காட்சி' போன்ற கவிதைகளில் கவிஞர் தனது சொந்த ஊரான இணுவில் கிராமத்தில் வைத்திருக்கும் உணர்வு வெளிப்பட்டு நிற்கின்றது.

'முகமிழந்த சில மனிதம்' பற்றியும் குறிப்பிடுகின்ற கவிஞர் -

**'மனிதத்தை அழிக்கும்**
**மனிதத்தை அழித்து**
**மனிதத்தை மதிக்கும்**
**மானுடம் பேணுவோம்'**

என்று 'மனிதத்தைத் தேடுகின்றார்.' மனிதருக்குப் 'போதும்' என்ற மனமே - போதும் என்று குறிபபிடுகின்றார்.

புலம்பெயர்ந்து வாழும் இளைஞர்கள் சிலர், தமது பயணத்தின் திசையினை மாற்றி, பாதை மாறிச் செல்கின்ற தன்மையையும் சக்திதாசன் கவிதைகளில் காணமுடிகின்றது.

**'மொட்டவிழ்ந்து போனவரும்**
**பூவாகி வந்தார்**
**பூக்களை ஈன்றவரோ**
**நொந்து நூலாகிப் போனார்'**

என்ற கருத்தையும் 'நெஞ்ச நெருடலில்' காண்கின்றோம்.

உயிரைக்கொடுத்து வெல்லுகின்ற உண்மைக்காதல் பற்றியும், வீடு வாங்க, நாளும் அது நிலைத்திருக்க வேலைதேடியோடும் ஓட்டமே ஐரோப்பாவில் ஓடும் மரண ஓட்டமென்றும் கூறுகின்ற கவிஞர்- 'அமைதிப்புறாவே இத்தனை காலம் எங்கிருந்தாய்' என்று இந்தியாவைப் பார்த்துக் கேட்கின்றார்.

'நாணம் எதுவரையுள்ளது', 'புன்னகையின் சிறப்பு என்ன', 'இருவேறு உலகங்கள்', 'நமக்குத் தேவையில்லை', 'வெங்காயம் விளையும் பூமியில் காஞ்சோண்டி விளையும் அவலம்' இவை தொடர்பான கவிதைகளும் 'நெஞ்ச நெருடலில்' உள்ளன.

**'மரத்தைத் தூக்கும் சுமை**
**இறக்கும் வரை**
**மனதில் கொண்ட சுமை**
**இறக்கும் வரை'**

என்ற தத்துவத்தையும் காணக்கூடியதாகவுள்ளது.

கவிதைக்குள் யாப்பு, மரபு, இலக்கணம் என்று தேடிக் கொண்டிருந்து காலத்தை வீண்செய்யாமல், வாசகர்கள் தமிழுக்குக் காப்பு இருக்கின்றதா? இன்றைய தமிழர்களின் அவலம் கருவாகியிருக்கின்றதா? என்று நோக்குதல் வேண்டும் என்று வாழ்த்தும் சில வரிகள் தந்த வேலணையூர் பொன்னண்ணாவின் வரிகளும் இங்கு நோக்கப்பட வேண்டியவையாகும்.

**பூ.நகுலன்**

# 'தீ' சுட்ட மண்ணில்



## நீரோ மன்னர்கள்

**மிலிந்த மொறகொடவும்**
**ஜயலத் ஜெயவர்த்தனவும்**
**ராஜித சேனாரத்னவும்**
**ஜோன் அமரதுங்கவும்**
**தங்கிட குளுகுளு அறைகள்**
**குந்தியிருக்க சோபா செற்கள்**
**கொப்பளிக்க மினரல் வாட்டர்**
**கொறிக்க வடையும் புண்ணாக்கும்**
**கைகுலுக்க கடவுள் "பிரதிநிதிகள்"**
**காவடி தூக்க மக்கள் "பிரதிநிதிகள்"**
**ஏறி அமர ஏஸி வாகனம்**
**ஏமாற்றப்பட்டது எங்கள் சனம் - விட்டால்**
**சந்திரிகா ஜே.வி.பியைக் கூட்டிவந்து**
**சமாதானப் பாடம் நடத்துவார்.**
**எங்கள் மண்ணை தீயில் கருக்கி**
**நாங்கள் அவலக்குரல் எழுப்புகையில்**
**பிடில் வாசித்து ரசித்தவர்களே...**
**யாழ்ப்பாணத்தைச் சுற்றி வயல் விதைத்திருப்பது ஏன்?**
**பலாலியைச் சூழ வாழும் மக்கள் ஆடு மேய்க்கிறார்களா?**
**யாழ்.நூல்நிலையம் பறவைகள் சரணாலயமானது எப்படி?**
**காங்கேசன் துறைமுகத்தை கண்டியில் கட்டியது யார்?**
**சீமெந்துத் தொழிற்சாலையில் போடும் பாணின் விலை என்ன?**
**கீரிமலைக்கு பஸ் எத்தனை மணிக்குப் புறப்படும்?**
**நவாலி தேவாலயத்திலுள்ள முருகனுக்கு என்ன பெயர்?**
**நாகர்கோயிலில் பாடசாலை ஏன் கட்டவில்லை?**
**செம்மணி கொழும்பில் எந்த இடத்திலே உள்ளது?**
**புனித யாகப்பர் கிருஷ்ணனின் எத்தனையாவது அவதாரம்?**
**மிருசுவிலில் தங்கப்புதையல் தோண்டியவர்கள் யார்?**
**தென்மராட்சியில் ஏன் தென்னை வளர்வதில்லை?**
**காணாமல் போனவர்கள் இதுவரை நாளும் எங்கிருந்தனர்?**
**1995 இல் யாழ்.மக்கள் "புனித யாத்திரையை" தொடங்கியது ஏன்?**
**இராணுவ முகாம்களில் "வாழைகளை" வெட்டி அடுக்கியிருப்பது ஏன்?**
**மாடுகள் படுப்பதற்காக இங்கு கட்டப்பட்டுள்ள பாடசாலைகள் எத்தனை?**
**யாழ்ப்பாணத்தில் அகதிகள் இல்லாமல் போனது எவ்வாறு?**
**பதில் தெரிந்த நீரோ மன்னர்களே**
**தகுந்த தீர்வுடன் வருகில் வாருங்கள்**
**பட்டாளத்தோடு பவனி வந்து**
**பகட்டுக்குப் பல்லிழிப்போர் எல்லாம்**
**பலாலியோடு நடையைக் கட்டுங்கள்.**

சிந்துஜா வித்தியாசாகர்
முல்லைத்தீவு

# கவிதைச் சோலை

## விழித்தெழு இளைஞனே


வளலாய் செல்வகுமார்

இயலாதென்றெண்ணி
இன்னும்
இளைத்திருக்கும் இளைஞனே!
உன் உள்ளங்கையிலும்
உள்ளத்திலும் இருப்பதை
ஏன் மறந்தாய்?

அந்தியில் சூரியன்
இல்லாத போதும்
பூமி
அள்ளிச் சொரியுதே
நிலவொளியை!
சந்தனக் கட்டை
தேய்ந்திடும் போதும்
செம்மணம் கமழுதே
நாளும்!
சாம்பலாய் பீனிக்ஸ்
எரிந்திட்ட போதும்
சிறகடித் தெழுகுதே
புதிதாய்!
நீ மட்டும் ஏன்
இன்னும்
தன்னம்பிக்கையிழந்து
தாடையில் கையுடன்...?
இன்றே...
உ(ன்)ள் மனதில் நீ தொலைத்த
"நம்பிக்கை" கோலை எடு
நாளை பிறக்கும்
உனக்கோர் உலகு!

# கிழக்கும் மேற்கும்

## ஆருணி-கான்சு



**முருகு**

பற்பல திசைகளில் ஓடிய சிறுவர்கள்
முனிவரின் முன்னே வந்து கூடினர்!
தம்முன் பணிவுடன் அமர்ந்த சிறுவரின்
ஒவ்வொரு முகமாய் முனிவர் நோக்கினார்!
"ஆருணி எங்கே?" என்று கேட்டார்!
"ஆருணி வயலுக்குச் சென்றுள்ளான் சுவாமி"
என்று சிறுவர்கள் கூறியபோதுதான்
ஆருணி வயலுக்குச் செல்ல அனுமதி
அளித்தமை முனிவரின் நினைவுக்கு வந்தது!
"பொழியும் மழையினில் வயலினில் தனிமையில்
பொல்லாப்பு எதனிலும் ஆருணி சிக்கினால்?..."
என்று நினைத்ததும் விரைந்து எழுந்தவர்
புயலென விரைந்தார் வயலை நோக்கியே!
வயலின் வரப்பு உடைப்பைத் தடுத்திட
வெள்ளப் பெருக்கைத் தடுத்து நிறுத்திடத்
தன்னலம் மறந்து - தன்னுடல் அடையும்
துன்பம் துறந்து - வரம்பின் குறுக்கே
படுத்த வண்ணம் ஆருணி குளிரினால்
படுகிற துன்பம் கண்ட முனிவரின்
. உள்ளம் நெகிழ்ந்தது! நெஞ்சம் திகைத்தது!
உடனவர் விரைந்து குளிரினால் நடுங்கும்
ஆருணியை தன்னிரு கைகளினாலும்
தூக்கி நிறுத்தினர் கண்கள் பனித்திட!
ஆருணி விரைந்துதன் குருபதம் பணிந்தான்!
அவனது நெஞ்சினில் கனன்றுகொண்டிருந்த
குருபக்தித் தரத்தினை எண்ணி வியந்த -
அவனது தியாகத்தின் உயர்வை வியந்த -
தௌமிய முனிவர் அவனைத் தன்கைகளால்
அன்புடன் அணைத்து அருளாசி புரிந்தார்!
முனிவரின் அன்புடன் ஆசியும் பெற்றதால்
அறிவினில் ஆற்றலில் அருளிலும் உயர்ந்தான்!
'ஆருணி உத்தாலகர்' எனும்பெரு முனிவராய்
வளர்ந்து சிறந்து புகழுடன் விளங்கினார்!!

சிறிய நாடகம் ஒல்லாந்து நாட்டில்
சிற்சில பகுதிகள் கடல் மட்டத்திலும்
தாழ்ந்து கிடப்பதால் - கடல் விழுங்காமல்
நாட்டைக் காத்திட வேண்டி வலிய
கடல் மதில்களினை அமைத்துக் கொண்டனர்!
கடற்கரை யோரம் சிறியதோர் ஊரில்
வசித்து வந்தான் சிறுவன் கான்சு!
இரண்டு மைலுக்கு அப்பா லுள்ளதோர்!
பள்ளிக்குச் சென்றவன் கற்று வந்தான்!
பள்ளியிலிருந்து வழமைபோல் ஒருநாள்
தனிமையில் நடந்து வந்துகொண் டிருந்தான்!
கடல்மதில் ஓரமாய் அமைந்த வீதியில்
அவனது கால்களில் திடீரென ஈரம்!
" இவ்விடம் எப்படித் தண்ணீர்க் கசியும்?...."
என்றவன் சிந்தனை அலைகள் மோதிட
மங்கிய ஒளியில் கூர்ந்து பார்த்தான்!
கடல் மதில் தனிலோர் சிறிய துவாரம்!
அதன் வழி யேதான் கடல்நீர் கசிந்தது!

(தொடரும்)

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanadu.com

**சிந்தனைக்கு**

*நாடு என்ப நாடா வளத்தன நாடுஅல்ல*
*நாட வளந்தரும் நாடு.*

-திருக்குறள்.

## நமது நோக்கு

### அதிகாரப் போட்டியின் அடுத்த கட்டம்!

அரசுக்கும் - ஜனாதிபதிக்கும் இடையேயான நிழல் யுத்தம் நீண்டுகொண்டே போகின்றது. ரணில் தலைமையிலான அரசாங்கம் - ஒரு வகையான நிர்வாகத்தையும், ஜனாதிபதி சந்திரிகா, தனது நிறைவேற்று அதிகார வலுவின் பின்னணியில் நின்றுகொண்டு மற்றொரு வகையிலான அரச நிர்வாகத்தையும் மேற்கொண்டுவருவதானது சிறிலங்காவின் எந்தவொரு பிரச்சினையிலும் இருவேறு முரண்பட்ட கருத்தியல் நோக்கிலான அணுகுமுறை கையாளப்படுவதன் காரணமாக ஒரு தீர்க்கமான முடிவை இருதரப்புமே எட்ட முடியாத நிலையே தொடர்வதற்குக் காரணமாகியுள்ளது.

இது ஒரு சுமுகமான வகையில் தீர்க்கப்படக்கூடிய சாத்தியக்கூற்றைக் கொண்டதாகத் தெரியவில்லை.

சந்தேகங்கள், நம்பிக்கையீனங்கள், அரசியல் பாரம்பரியப்பகைமைகள், குறுகிய அரசியல் அபிலாஷைகள் எனப்பல்வேறுபட்ட தீர்க்கப்படமுடியாத சிக்கலான பிரச்சினைகள் இருதரப்பினரிடையேயும் வளர்ந்துகொண்டே போகின்றனவேயன்றி, அவற்றினை இயல்பாகத் தீர்த்துக்கொண்டு ஒரு நாகரிகமான அரசியல் நடைமுறைக்கு, இருதரப்பும் ஒருபோதுமே இணக்கம் காணக்கூடிய சூழல் ஏற்படும் நிலை தென்படுவதாக இல்லை. அரசு செய்யும் அனைத்தையும் எதிர்ப்பதுதான், எதிர்க்கட்சிகளின் பொறுப்புமிக்க கடமை என்பதும், எதிர்க்கட்சிகள் செய்வதெல்லாம் பிழையானது எனப்புறந்தள்ளுவதுதான் ஆளும் கட்சியின் செயற்பாடு என்றுதான் சிறிலங்காவின் ஜனநாயகத்திற்கான வரைவிலக்கணம் கூறுகின்றது போலும்!

இன்றைய சமாதான முயற்சிகள் பொதுஜன ஐக்கிய முன்னணியின் காலத்தில், அதாவது சந்திரிகாவின் ஆட்சிக் காலத்தில், தான் ஆரம்பமானது என்று ரணில் கூறினாலும், அந்தச் சமாதான முயற்சிகளின் தற்போதைய நகர்வு நிலை குறித்து தனக்கு எதுவும் சரிவரத் தெளிவாகத் தெரியாது, அரசும் அது குறித்து தனக்கு எதனையும் தெரிவிப்பதில்லை எனச் சந்திரிகா சர்வதேசமெங்கும் வெளிப்படையாகவே கூறிவருவது முரண்நகையான விடயமாகும்.

ஒருநாட்டின் ஜனாதிபதிக்கும், பிரதமருக்கும் இடையே இப்படியானதோர் கசப்புணர்வு நிலை நிலவுவதானது, அந்த நாட்டின் வளர்ச்சிக்கு எந்தவகையிலும் உதவப்போவதில்லை. குறிப்பாக சிறிலங்காவைப் பொறுத்தவரையில் அதன் சிக்கலான இனப்பிரச்சினைக்கு தீர்வுகாணும் வகையிலான சமாதான முயற்சிகள், நம்பிக்கையூட்டும் வகையிலான முன்னேற்ற நகர்வினை வெற்றிகரமாக மேற்கொள்வதற்கு இது எந்தவகையிலும் உதவப்போவதில்லை.

தன்முயற்சிகளுக்குச் சந்திரிகா பக்கபலமாக இருந்து பிரச்சினையைத் தீர்க்க உதவுவார் என ரணில் நம்பப் போவதுமில்லை.

ரணிலின் முயற்சிகளுக்கு பின்பலமாக இருந்து, தேசியப் பிரச்சினைக்கு தீர்வுகாண உதவவேண்டும் என்ற, மனோபாவம் சந்திரிகாவுக்கு ஏற்படப்போவதுமில்லை என்பதை, இருவரினதும் நிலைப்பாடுகள் தெளிவாக உணர்த்தி நிற்கின்றன.

ரணிலின் திட்டங்களுக்கு சந்திரிகாவின் நிறைவேற்று அதிகாரப்பலமானது, ஒரு பலத்த - எதிர்கொண்டு வெல்ல முடியாத - சவாலாகவே உள்ளது. இந்த நிலையில், ஜனாதிபதியின் வசமுள்ள அபரிமிதமான அதிகாரங்களை மட்டுப்படுத்தவோ, கட்டுப்படுத்தவோ, ரணில் ஏதாவது ஒரு முயற்சியை, ஏதோவோர் பூலோபாயத்தின் அடிப்படையில் மேற்கொள்ள வேண்டிய அவசியம் தவிர்க்கமுடியாததாகி உள்ளது.

இது சாத்தியமாகுமா, இல்லையா என்பது வேறு விடயம்.

ஆனால், சாத்தியப்படுத்தப்பட வேண்டிய தேவை ரணிலுக்கு ஏற்பட்டுள்ளதால், ரணில் இத்தகையதோர் முயற்சியில் மூன்றாவது தடவையாக முனைந்துள்ளார்.

இந்தத்தடவை தேசியபாதுகாப்பு மறுசீரமைப்புச் சட்டத்தை அமுல்படுத்துவதன் மூலம் ஜனாதிபதியின் அதிகாரத்தைக் குறைக்கும் முயற்சியில் ரணில் இறங்கியுள்ளார்.

ஜனாதிபதியின் நிறைவேற்று அதிகாரத்தைக் குறைத்து முப்படைகளின் தலைவியான, அவர் வசமிருக்கும் தேசிய பாதுகாப்பு அதிகாரத்தை நாடாளுமன்றத்தின் வசம் எடுத்துக்கொள்வதற்கு வகை செய்யும் சட்டவரைபொன்றை கொண்டுவந்து, அதனைப் நாடாளுமன்றில் நிறைவேற்றிவிட ரணில் தீவிரம் கொண்டவராக உள்ளார்.

ஆனால், சந்திரிகாவோ, நாடாளுமன்றத்தைக் கலைத்தோ அல்லது வேறு வகையிலோ ரணிலின் ஆட்சியை நீக்கி புதிய அரசை அமைக்கும் திட்டத்தில் மூழ்கியிருப்பதாகத் தெரிகிறது.

இந்தநிலையில், இந்த அரசியல் கயிறிழுவைப் போட்டியில் யார் வெல்லப்போகிறார் என்பதே இன்றைய கேள்வியாகவும் உள்ளது.

இருதரப்புமே தமது வியூகங்களை மாற்றி மாற்றி அமைத்து தத்தம் எதிரணிக்கு நெருக்கடியை கொடுப்பதிலேயே இப்போது முனைப்புடன் செயற்படுகிறார்கள் என்பது தெளிவு....

இந்த நிலையில் சமாதானம் - இடைக்கால நிர்வாகம் - பேச்சுவார்த்தை என்பதெல்லாம் ஸ்திரமற்ற ஆட்சியினரின், வலுவற்ற நடவடிக்கைகளாகவே, இருக்கும் என்பதில் ஐயமில்லை.

## நாடும் நடப்பும்




# முஸ்லிம்கள் தரப்பு திட்டவரைபை தயாரிப்பதற்கு ஹக்கீம் தலைமையிலான குழு லண்டன் பயணம்

(கொழும்பு)

அரசின் இடைக்கால நிர்வாகசபை யோசனைகளுக்குப் பதிலாகத் தமிழீழ விடுதலைப் புலிகள் மாற்றுத் திட்டவரைபை இம்மாத இறுதிக்குள் சமர்ப்பிக்கவுள்ள இவ்வேளையில், முஸ்லிம்கள் தொடர்பான நிலைப்பாட்டை ஆராய்ந்து திட்டவரைபொன்றை முன்வைப்பதற்கென, சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும், அமைச்சருமான ரவூப் ஹக்கீம் தலைமையில் விசேட அரசியலமைப்பு விவகாரக்குழு ஒன்றை அமைத்துளளது.

இக்குழு எதிர்வரும் 25 ஆம் திகதி பிரிட்டனுக்கு பயணமாக உள்ளது. பிரித்தானிய வெளிநாட்டு விவகார பொதுநலவாயத் திணைக்களத்தின் ஏற்பாட்டிலேயே இந்தக் குழு பிரிட்டன் சென்று, திட்டவரைபு குறித்து ஆராயவுள்ளது.

இலங்கையில் இருந்து பிரிட்டன் செல்லவுள்ள இந்தக் குழுவினரை, இலங்கைக்கான பிரித்தானிய பிரதித்தூதுவர் பீட்டர் றியூஸ் அழைத்துச் செல்லவுள்ளார்.

நவம்பர் முதலாம் திகதிவரை பிரிட்டனில் தங்கவுள்ள இந்தக் குழுவினர் - ஸ்கொட்லாந்து, அயர்லாந்து உட்பட பல்வேறு இடங்களுக்கும் செல்லவுள்ளனர்.

இக்குழுவினரை எதிர்வரும் 30 ஆம் திகதி பிரித்தானிய சிறிலங்கா சர்வகட்சி அமைப்பின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான பெரி கார்டினர், அதன் செயலாளர் நாயகம் என்.ரி.லவ், சிறுபான்மை சமூகத்திற்கான விசுவாச அமைப்பின் முக்கியஸ்தர் மக்பூல் அலி ஆகியோர் சந்திக்கவுள்ளனர். இக்குழுவினர், 29 ஆம் திகதி புதன்கிழமை லண்டனிலிருந்து ஸ்கொட்லாந்து செல்லவுள்ளனர்.

ஸ்கொட்லாந்து அரசியலமைப்புக் கொள்கை விவகார அலகின் தலைவர் கொலின் மிலர் அவர்களைச் சந்தித்து, அதிகாரப் பரவலாக்கம் பற்றியும், அரசியல் யாப்பு சம்பந்தமான கொள்கைத் திட்டங்களைப் பற்றியும் கலந்துரையாடவுள்ளதாக இக்குழுவின் முக்கிய உறுப்பினரும், சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் செயலாளர் நாயகமுமான எம்.ரீ.ஹஸன் அலி தெரிவித்தார்.

அன்றிரவு ஸ்கொட்லாந்தின் சகல அரசியல் கட்சிகளையும் சேர்ந்த நாடாளுமன்ற பிரதிநிதிகளைச் சந்தித்து உரையாடவுள்ள இக்குழுவினரை, அவர்கள் விருந்தளித்து, கௌரவிக்கவுள்ளனர்.

30 ஆம் திகதி பெல்பாஸ்ட்டிலுள்ள எடின்பரோ பல்கலைக்கழகத்தில் ஸ்கொட்லாந்து அரசியல்வாதிகளுடனும், சட்ட நிபுணர்களுடனும், அரசியல் ஆய்வாளர்களுடனும் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஏற்கனவே தயாரித்துள்ள, இலங்கை முஸ்லிம் சமூகத்தின் அபிலாஷைகள் சம்பந்தமான கொள்கைத் திட்டங்களைப் பற்றிக் கலந்துரையாடவுள்ளதாகத் தெரிவித்த ஹஸன் அலி - ஸ்கொட்லாந்து ஒன்றியத்தின் ஆளுநர் எபன் ஹார்ட்போர்ட் இதற்கான ஏற்பாடுகளைச் செய்துவருவதாகவும் கூறினார்.

31 ஆம் திகதி மேற்கு அயர்லாந்து பொலிஸ் சேவையின் செயற்பாடுகள், அதிலுள்ள முக்கிய அம்சங்கள், பொலிஸ் சேவையின் அமுலாக்கம் பற்றி ஆராய்வு செய்யவுள்ளனர். முஸ்லிம் காங்கிரஸ் நீண்டகாலமாக வலியுறுத்திவரும் சமூக ரீதியான பொலிஸ் பாதுகாப்புக் குறித்து விரிவானமுறையில் உயரதிகாரிகளுடன் கலந்துரையாடவுள்ளனர்.

இதேவேளை, இக்குழுவினர் பிரித்தானியாவில் தங்கியிருக்கும் காலத்தில், இவர்களைச் சந்தித்து, சமாதான முன்னெடுப்புக்கள் குறித்து கலந்துரையாடுவதற்காக நோர்வேயின் விஷேட தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் பிரிட்டன் செல்லவுள்ளார்.

30 ஆம் திகதி இக்குழுவினரைச் சந்திக்க ஏற்பாடுகளைச் செய்து தருமாறு நோர்வே தூதுவராலயம் - அமைச்சர் ரவூப ஹக்கீமிடம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

நிகழ்ச்சிநிரல் ஏற்கனவே தயார் செய்யப்பட்டுள்ளதால், 30 ஆம் திகதிக்கு முன்னரோ பின்னரோ எரிக் சொல்ஹெய்முடனான சந்திப்பு இடம்பெறலாம் எனத் தெரியவருகின்றது.

அரசின் இடைக்கால நிர்வாகசபை யோசனைகளுக்குப் பதிலாக, புலிகளின் மாற்று யோசனைகள் இம்மாதம் அரசிற்குச் சமர்ப்பிக்கப்பட்ட உடனேயே, தடைப்பட்டுள்ள சமாதானப் பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்படுமெனப் பொதுவாக எதிர்பார்க்கப்படுகின்றபோதிலும், அதற்கான சாத்தியக்கூறுகள் அரிதாகவே காணப்படுகின்றது.

புலிகள் சமர்ப்பிக்கும் மாற்று யோசனைகளில் - முஸ்லிம்கள் குறித்த ஏற்பாடுகளை விரிவாக ஆராய்ந்து, அதற்குப் பொருத்தமான இணக்கப்பாட்டையோ அல்லது மாற்று யோசனைத் திருத்தங்களையோ சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் - அரசிற்குச் சமர்ப்பிக்கும்வரை, சமாதானப் பேச்சுவார்த்தைகள் ஆரம்பமாகமாட்டாது என நம்பகமாகத் தெரியவருகின்றது.

அரசு சமர்ப்பித்த இடைக்கால நிர்வாகசபை யோசனைகளைப் புலிகள் நிராகரிக்காமல், அதற்குப் பதில் யோசனைகளைத் தயாரிக்கப் பல மாதகாலம் எடுத்துள்ள அதேவேளை, சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் - முஸ்லிம்கள் சம்பந்தப்பட்ட யோசனைகளையும் தயாரித்து வருகின்றது.

புலிகள் சமர்ப்பிக்கவுள்ள யோசனைகளை ஆராய்ந்து, அதுபற்றிய ஏற்பாடுகளைத் தயார்செய்ய, குறைந்தது ஒரு மாதகாலமாவது தேவைப்படுமென மு.கா. வட்டாரங்கள் தெரிவித்தன.

# படைச் சிப்பாய் பொலிஸாரால் கைது

(அநுராதபுரம்)

பெருந்தொகையான ஆயுதங்களைத் தமது வீட்டில் மறைத்து வைத்திருந்ததாகக் கூறப்படும் இராணுவச் சிப்பாய் ஒருவரை, அநுராதபுர பொலிஸ்நிலைய நடவடிக்கைப் பிரிவினர் கைதுசெய்தனர்.

அநுராதபுரம் பொலிஸ்நிலையத்துக்குக் கிடைத்த இரகசியத் தகவலை அடுத்து, இந்தப் பிரிவு நேற்று முன்தினம் இரவு, இந்த இராணுவச் சிப்பாயின் வீட்டில் தேடுதல் நடத்திய போது, இவர் கைது செய்யப்பட்டார்.

வீட்டிலுள்ள ஆயுதங்களும் பொலிஸாரினால் கைப்பற்றப் பட்டன.

# சகல இன மக்களும் ஒற்றுமையுடன் வாழ நடவடிக்கை எடுப்போம்

## எதிர்க்கட்சித் தலைவர் தெரிவிப்பு

(கொழும்பு)

நாட்டிலுள்ள சகல சமூகங்களும் ஒற்றுமையாக வாழ்வதற்கு, சமாதான நடவடிக்கைகள் உறுதிப்படுத்தவேண்டும் என்று, எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.


சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் தலைமையிலான பொது ஜன ஐக்கிய முன்னணியே இதை நிறைவேற்றும் ஆற்றலைக் கொண்டுள்ளது எனவும் அவர் கூறினார்.

சமாதானத்தை நிலைநாட்டுவதற்கு பொதுஜன ஐக்கிய முன்னணி எதிரானது அல்ல. இந்த முயற்சியைச் சாதிப்பதில் அரசாங்கம் மேற்கொள்ளும் வழிமுறை கேள்விக்கிடமானது என்று கூறினார்.

# மன்னாரில் பொங்கிய மக்கள் வெள்ளம்

முத்துவிளையும் மன்னார் கடல்... பொங்கிமோதும் மன்னார் மண்ணிலே... தமிழரின் அடிமனக் கிடக்கை என்ன? என்பதை உலகத்திற்கு உரத்துச் சொல்லும் வகையில் பொங்கி வந்தார்கள் மன்னார் வாழ் மக்கள்.

15.10.2003 அன்று, மன்னார் பொது விளையாட்டு மைதானத்திற்குச் செபஸ்தியார் தேவாலயம், பேருந்து நிலையம், சென். சேவியர் கல்லூரி ஆகிய இடங்களிலிருந்து பேரணியாக வந்தவர்கள் - கைகளில் தேசியத் தலைவர் பிரபாகரனின் புகைப்படத்தையும், புலிச்சின்னப் படத்தையும் ஏந்திக் குரலெழுப்பி வந்தார்கள்.



☞ எமது நிலம் எமக்கு வேண்டும்.

☞ எமது நிலமே எமக்கு வேண்டும்.

☞ சூரியதேவன் எங்கள் தலைவன் பிரபாகரன்

☞ கடற்படையே வெளியேறு, புலிப்படை போதும் எங்களிற்கு

☞ மாணவர்கள் பொங்கி எழுவதைத் தடுப்பது ... ,மாணவர்களை பலியிட்டத்தை மறந்த நிலையிலா?

போன்ற கோஷங்களை எழுப்பியவாறு, வானுயர வந்தவர்கள் பொதுவிளையாட்டு மைதானத்தை வந்தடைந்ததும் - பொதுச் சுடரேற்றல், தேசியக்கொடியேற்றலைத் தொடர்ந்து பொங்கும் உணர்வை வெளிப்படுத்தும் மேடை நிகழ்வுகள் ஆரம்பமாகின. அரங்கச் செயற்பாட்டுக் குழுவினரும், பொங்குதமிழ் கலைஞர்களும் இதில் கலந்து சிறப்பித்தார்கள்.

கலைஞர்களும், மக்களும் ஒன்றிணைந்து பொங்கு தமிழ்ப் பாடலைப் பாடியதுடன், பிரகடனத்தையும் செய்துகொண்டனர்.

☞ எங்கள் நாடு தமிழீழம்

☞ எங்கள் தலைவன் பிரபாகரன்

எனக் குரலெழுப்பியதைக் காணமுடிந்தது.



நிகழ்வின் இன்னுமொரு சிறப்பும் உணர்வுபூர்வமானதுமான அம்சம்.

என்னவென்றால்... ஊர்வலம் வந்தடைந்ததும் மழை பெய்யத் தொடங்கியபோதும், மக்கள் வெளியேறவில்லை...குண்டு மழையில் நனைந்து கொடுமைகளைக் கண்டு வாழ்ந்தவர்கள் - இயல்புநிலை கேட்டு வந்தவர்களுக்கு இயற்கையான மாரி மழை எதனையும் செய்யவில்லை... பொங்கிவழியும் உணர்வை வெளிப்படுத்த, பொங்குதமிழில் ஒன்றியிருந்தார்கள். பொங்கு தமிழைத் தடுப்பதற்குப் பொய்ப்பிரசாரங்களைச் செய்தவர்களுக்கும், கனரக வாகனங்களை நிறுத்தி வைத்தவர்களுக்கும், காக்கியுடையாரை விதைத்து வைத்தவர்களுக்கும்... மழை பொழிகின்ற போதும் மக்கள் விலகாதிருந்தது பேரதிர்ச்சியை ஏற்படுத்தியிருக்கும் என்பது உண்மையே.

மக்களின் உணர்வுகளைத் தடுப்பதன் மூலம் - எவராலும், எதனையும் சாதித்துவிட முடியாது. காலங்காலமாக அடிமைப்படுத்தி வைக்கும் நோக்கோடு பேரினவாதிகள் திட்டமிட்டுச் செய்த நடவடிக்கைகள் பற்றி அலட்டிக்கொள்ளாது, காலத்திற்கு ஏற்றாப்போல வாழ்வை நகர்த்திக்கொண்டிருந்த மக்களில் ஒரு பகுதியினரும், விழித்துக்கொள்ளும் வகையில் பொங்கு தமிழ் அமைந்துள்ளதென்பதைப் புரிந்துகொண்ட பேரினவாத எண்ணம் கொண்டவர்கள், பொங்குதமிழில் மக்கள் கலந்துகொள்வதைத் தடுப்பது அவர்களைப் பொறுத்தவரையில் நியாயமானதாகத் தெரியலாம்.

ஆனால்... அதன்மூலம் மக்கள் விழிப்படைவதற்கே பெரும்பாலும் வாய்ப்புள்ளதென்பதை ஏனோ? அறியாமலிருக்கின்றனர்.

இதன்மூலம் வரலாற்றினை அறியாமலிருக்கின்றனர் என்பதைதான் பறைசாற்றியுள்ளனர்.

போர் தீவிரமாக நடைபெற்ற காலத்திலும் போராயுதங்களை வைத்து அடக்க நினைத்தவர்கள், இன்றைய அமைதியான காலத்திலும் போராயுதத்தை நீட்டி, மக்களின் உணர்வுகளை அடக்கலாமென எண்ணுகிறார்கள்.

போர் நடைபெறும்போதே எப்படியான இறுக்கங்களையும் சமாளித்து எதிர்த்து நின்றவர்கள், அமைதியான சூழ்நிலையிலும் போராயுதங்களைக் காட்டி... நீட்டி அடக்க நினைப்பதைச் சும்மா பார்த்துக்கொண்டா இருக்கப் போகின்றனர்.

ஆகவே, பொங்குதமிழ் போன்று உணர்வுபூர்வமான, உரிமையுடனான உரிமை கேட்கும் மக்கள் போராட்டமானது, பொங்குதமிழை தடுப்பது - பேரெழுச்சிகொண்ட தமிழர் அனைத்து மாவட்டங்களிலும் ஒன்றாக... ஒரே நாளில் திரண்டெழவேண்டிய வேளையினை உணர்த்துவதாகவே தென்படுகின்றது.

ஊரூராய் பொங்குதமிழ் - உலகச் சமூகத்திற்குச் தமிழரின் அபிலாஷை என்னவென்பதை எடுத்துரைக்கும் பொங்குதமிழ்..என்று குரலை உயர்த்திக்கொண்டு, பொங்குதமிழ் ஏற்பாட்டாளர்கள் ஊரூராய்ச் சென்று, மக்களை கண்டு பேசியபோது - மக்கள் வெளிப்படுத்திய அபிலாஷையினையே பொங்குதமிழ் ஊடாக வெளி உலகத்திற்கு எடுத்துக் கூறுகின்றனர்.

வவுனியா - பாவற்குளம் என்ற கிராமத்தில் பொங்குதமிழ் ஏற்பாட்டுக் குழுவினர் மக்களுடன் உரையாடியபோது, மக்கள் வெளிப்படுத்தியவொன்றுதான் -

**எங்கள் வீடுகளிற்கு நாங்கள் போக வேண்டும்.**

**படையினரே உங்கள் வீடுகளிற்கு நீங்கள் போங்கள்.**

இதனை 72 வயதுடைய மூதாட்டியொருவரே வலியுறுத்தினார். "ஆமிக்காரங்கள்" அவங்கடை வீடுகளிற்கு போனாங்களெண்டால்... எங்கட வீடுகளில நாங்கள் இருக்கலாம் தானே" இந்தக் கேள்வி மக்களிடம் இயல்பாகத் தோன்றுவதுதான் என்பதை பல்வேறு சந்தர்ப்பங்களில் மக்கள் வெளிப்படுத்தி வந்துள்ளனர்.

வவுனியா - தரணிக்குளம் என்ற கிராமத்தில் முதியவர் ஒருவர் சொன்னார்... "எங்கட கிராமங்களை நோக்கி படையினர் படையெடுத்து வந்து, எங்கடை வீடுகளில் குந்தியிருக்கிறார்கள். நாங்கள் அகதி முகாம்களில் அவலமான, நிம்மதியில்லாத வாழ்வை வாழ்கின்றோம். நான் வெட்டிய கிணத்தில எப்ப தண்ணி அள்ளிக் குடிக்கிறனோ... அண்டைக்குத்தான் மனம் ஆறுதலடையும்."



இது மக்களிடம் இயல்பாக வருமொன்று. தனித்தனியே மக்கள் சொல்லித்திரிந்தவைதான், இன்று பொங்குதமிழ் ஊடாக உலகத்திற்குச் சொல்லப்படுகின்றது. இதனை உலகம் உணரவேண்டும் என்ற எண்ணம் ஏன் தோன்றுகின்றதென்றால்... அரசிற்கு அரசு என்ற ஆதரவுப்போக்கு - தமிழரின் மனக்கிடக்கை - அவர்களின் இனத்தை கருவறுக்கும் அரசின் செயற்பாட்டினை கவனிக்காத உலகத்தை, தமிழரின் உணர்வு என்னவென்பதை கவனத்திலெடுங்கள் என்று கேட்பதாகவே பொங்குதமிழ் ஊடாக தமிழரணி திரள்கின்றனர்.

இந்த மனக்கிடக்கை, வெளிப்படுத்துகை இன்னும் தொடரும். எவர் தடுப்பினும் தொடரத்தான் போகின்றது. இதனை தடுப்பதன் மூலம், தம்மை எப்படியானவர்கள் எனவும் வெளிப்படுத்துகின்றனர்.

மன்னார் பொங்கு தமிழில் - நாடாளுமன்ற அமர்வுபோல, நாடாளுமன்ற உறுப்பினர்களும் பெருமளவில் கலந்துகொண்டனர். அவர்கள் தெரிவித்த முக்கியமான கருத்துக்களை மீளவும் பார்ப்பது பொருத்தமானதாகவே தெரிகின்றது.

☞ யசிர் அரபாத்தை ஏமாற்றியதுபோல், தலைவன் பிரபாகரனை எவராலும் ஏமாற்ற முடியாது.

*செல்வம் அடைக்கலநாதன்.*

☞ ஈரானும், ஈராக்கும் அமெரிக்காவுக்கு பெரும் பிரச்சினை இல்லை. ஈழந்தான் பிரச்சினையாகத் தெரிகின்றது. இதனை சரியான முறையில் அணுகவில்லை என்றால், தீர்வொன்று எட்டப்படவில்லை என்றால் - மலையக மக்களும் இணைந்து போராடுவோம்.

*சந்திரசேகரன்*

☞ மக்களிற்குப் பயத்தை உண்டாக்கி, பொங்குதமிழை தடுக்கலாம் என ஆயுதப்படையினர் நினைத்து செயற்படுகின்றனர். அவர்கள் நினைப்பது நிறைவேறாது... மக்கள் பயத்தைக் களைந்து, மன்னாரில் மக்கள் பொங்கியெழுந்து வந்துள்ளனர்.

*கலாநிதி சிதம்பரநாதன்.*

☞ மாணவர்களைத் தடுப்பதோ அல்லது அவர்கள் பொங்குதமிழில் கலந்துகொள்வதற்குச் சட்டநடவடிக்கை எடுப்பதோ முடியாது. பாடசாலை முடிவடைந்த பின்பே மாணவர்கள் பொங்குதமிழில் கலந்துகொள்கின்றனர். போராட்டங்களில் கலந்துகொள்கின்றவர்களை மாணவர்கள் என்று தனியாகப் பிரித்து நடவடிக்கை எடுக்கமுடியாது.

*ரவிராஜ்*

☞ தமிழன் தலைநிமிர்ந்து நடப்பதற்கு சுயநிர்ணய உரிமை வேண்டும். அதனைக் கேட்டே பொங்குதமிழில் மக்கள் பொங்கி வருகின்றனர். இதனை எவர் தடுத்தாலும், மக்கள் தடைகளைத் தாண்டிக் கிளர்ந்தெழுந்து வருவார்கள்.

*வெள்ளிமலை கிருஷ்ணபிள்ளை*

☞ மன்னார் பொங்குதமிழில் மழையையும் பொருட்படுத்தாமல், மக்கள் பேரெழுச்சியுடன் வந்திருப்பது - தமிழரின் உணர்வினை உலகத்துக்குச் சொல்வதாகவே தெரிகின்றது.

*துரைரட்ணசிங்கம்*

☞ பொங்குதமிழ் அம்பாறையிலும் நடத்தப்படவேண்டும். அங்கு மக்கள் தமது ஆசையைச் சொல்வதற்குக் களமமைத்துக் கொடுக்க வேண்டும். மன்னார் பொங்குதமிழைப் பார்க்கும்போது, அந்த எண்ணமே அதிகரிக்கின்றது.

*சந்திரநேரு*

தெற்கிலிருந்து குரங்குபாஞ்சானுக்கு படையெடுப்பவர்கள் - இவ்வளவு காலமும் எந்தத் திசையிலிருந்து படையெடுத்து வந்தனர்? இந்தக் கதைகளை விட்டுவிடவேண்டும். மீண்டுமோர் ஆயுதப்போர் வெடிக்க வழியமைப்பதிலும் பார்க்க, நிரந்தர தீர்வை ஏற்படுத்துவதற்கு அனைத்து அதிகாரங்களுடனும் இடைக்கால நிர்வாகசபையை வழங்கவேண்டும்.

*சிவசக்தி ஆனந்தன்*

மக்களும் மக்களின் பிரதிநிதிகளும் பொங்கு

**கனகரவி**

தமிழில் ஒன்றாக அணிதிரண்டு கோருவதை, அலட்சியப்படுத்துவது மாறுபட்ட விளைவை ஏற்படுத்தலாம். தமிழர் தாயகத்தை அங்கீகரிக்காத அனைத்துலக சமூகம் - பொங்கு தமிழுக்குக் கூறப்போகும் பதிலென்ன? பொங்கு தமிழில் பறை, தவில் முழங்க, மக்கள் குரல் கொடுப்பது விளையாட்டானதொன்றல்ல.

ஆகவே, மக்களின் அபிலாஷை, மனக்கிடக்கை என்னவென்பதைப் புரிந்து நிறைவேற்றுவதே அவசியமானதாகப் பொங்கு தமிழின் ஊடாக வெளிப்படுத்தப்படுகின்றது. தமிழரின் அபிலாஷை நிறைவேறும்வரை, பொங்குதமிழ் தொடர்ந்துகொண்டே இருக்க வேண்டுமென்றே கூறவேண்டியதாக இன்றைய நிலைமை உள்ளது. ❑

# பொலிவியாவில் ஆட்சி மாற்றத்தின் பின் படைகள் முகாம்களுக்குத் திரும்பின!



பொலிவியாவில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டபின் படையினரையும் கனரக ஆயுதங்களையும் - முகாம்களுக்கு புதிய ஜனாதிபதி கார்லோஷ் மெசா அனுப்பியுள்ளார்.

60 இற்கும் மேற்பட்டவர்களின் மரணத்திற்குக் காரணமாக இருந்தவர்கள், தண்டிக்கப்படுவார்கள் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

பொலிவியாவில் விமான நிலையங்கள் மீண்டும் திறக்கப்பட்டு கடைகளும் வேலைத்தளங்களும் மீண்டும் இயங்க ஆரம்பித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

புதிய ஜனாதிபதி - விரைவில் தேர்தல் ஒன்றை நடத்துவதற்கான ஒழுங்குகளைச் செய்வதற்கு உறுதியளித்துள்ளதாகவும், இந்திய பழங்குடியினருக்கு கூடிய அளவில் சலுகைகளை வழங்கவுள்ளதாகவும் அறிவித்தார்.

கொக்கேயின் எனப்படும் போதைவஸ்து தயாரிப்பில் கொக்கோ மூலப்பொருளாகப் பாவிக்கப்பட்டதனால், கொக்கோ உற்பத்தியைத் தடைசெய்யுமாறு அமெரிக்கா முன்னைய அரசைக் கேட்டிருந்தது. ஆனால், புதிய ஜனாதிபதி கொக்கோ உறபத்தியை வேறு பாவனைகளுக்கு பாவிப்பதற்கு, தொடர்ந்தும் உற்பத்தியை அதிகரிக்கப் போவதாக உறுதியளித்துள்ளார்.

# அமெரிக்கா மீதான தாக்குதல் தொடர்ந்தும் மேற்கொள்ளப்படும்!

## ஒளிநாடா மூலம் பின்லேடன் எச்சரிக்கை

அமெரிக்காவிற்கு உள்ளேயும், வெளியிலும் மேலும் தாக்குதல்களை நடத்தப்போவதாகவும் - அமெரிக்காவிற்கு உதவும் நாடுகளும் தாககுதலுக்குள்ளாக்கப்படும் எனவும், அல் ஜசீரா தொலைககாட்சிக்கு அனுப்பி வைத்த ஒளி நாடாவில் பின்லேடன் தெரிவித்துள்ளார்.

பாக்தாத்தில் இஸ்லாமிய அரசு ஒன்று உருவாக்கப்படும்வரை புனிதப்போரை தொடரவேண்டும் எனவும், அந்த நாடாவில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஈராக்கின் இராணுவ வலுவைக் குறைப்பதற்கும் அதன் எண்ணை வளத்தை பறித்தெடுப்பதற்குமே இப்போரை அமெரிக்க அதிபர் ஆரம்பித்ததாக ஒளிநாடா மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது.

ஒளி நாடாவில் காணப்பட்ட பேச்சின் ஒலியும் பேசப்பட்ட முறையும்- பினலேடன் என அறியக்கூடியதாக இருந்ததாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நாடாக்களில் ஒன்று அமெரிக்கர்களுக்கும், இரண்டாவது ஈராக்கியர்களுக்கு வேண்டுகோள் விடுக்கப்பட்டதாகவும், அவை அண்மையில் பதியப்பட்டதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.



பலஸ்தீனத்தில் அண்மையில் பதவியில் இருந்து விலகிய மொகமட் அபாஸ் அமெரிக்காவின் கைக்கூலி எனவும் வர்ணிக்கப்பட்டிருந்தது.

## பாப்பரசர் அருளப்பர் சின்னப்பரால்

# அன்னை தெரேசாவிற்கான அருளாளர் பட்டம் வழங்கப்பட்டது



அன்னை தெரேசா கல்கத்தாவில் 60 ஆண்டுகள் நோயாளிகளுக்கும், மரணத்தின் பிடியில் சிக்கியுள்ள மக்களுக்குமாக பணிபுரிந்து வந்தவர். இவர் ஆறு ஆண்டுகளின் முன மரணமடைந்தார். இவருக்கான அருளாளர் பட்டமளிப்பு நிகழ்வை போப்பாண்டவர் அருளப்பர் சின்னப்பரினால் ஆயிரத்துக்கும் அதிக மான மக்கள் முன்னிலையில் சென் பீட்டர் தேவாலயத்தில் நடத்தப்பட்டது.

யோன் போலின் விசேட ஆராதனையின்போது, அன்னை தெரேசாவின் தனது துறவு நிலைக்கான பணிகளைக் குறிப்பிட்டபோது, வெள்ளைநிற, நீலநிற, கரையுடைய ஆடை அணிந்திருந்த திருக்கன்னி மடத்தைச் சேர்ந்தவர்கள் பலரது உற்சாகமான கரகோசத்தின் மத்தியில் கண்ணீர்விட்டு அழுததைக் காணக்கூடியதாக இருந்தது.

கடந்த ஒரு வாரத்துள் நடைபெற்ற இரண்டாவது பெரிய நிகழ்வெனக் கருதப்பட்டது. போப்பான்டவரின் 25 வருட சேவையாற்றிய நிகழ்வும் அடங்கியிருந்தது.

# வட ஈராக்கில் தாக்குதல் இரு அமெ. படையினர் பலி!





ஈராக்கின் வட பகுதியான கிக்கூக்கில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற தாக்குதலில் இரண்டு அமெரிக்கப் படையினர் கொல்லப்பட்டுள்ளார்கள். றொக்கெட் கிரனைட்டுக்கள், சிறிய ரக ஆயுதங்கள் மூலம் இந்தத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதாகவும்- இத்தாக்குதலில் பொதுமகனொருவரும் காயமடைந்ததாகவும்- அமெரிக்கப் படையதிகாரி அபேர்லி தெரிவித்தார்.

அத்துடன், பலூஜாவில் வேறொரு தொடரணி ஒன்றின் மீது நடத்தப்பட்ட ரொக்கட் தாக்குதலில் வெடிப்பொருட்களுடன் சென்ற தொடரணி வண்டி தீப்பற்றி எரிந்ததாக ரொய்ட்டர் படப்பிடிப்பாளர் அக்ரம் சலே தெரிவித்தார்.

இந்தத் குண்டுத் தாக்குதலின் போது உலோகத் துண்டுகள் நாற்புறமும் சிதறியதாகவும், குண்டுத் தாக்குதலினால் ஏற்பட்ட கரும்புகை வானத்தை மறைத்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## உலக நோக்கு

# ஜமா இஸ்லாமியா அமைப்பு முக்கியஸ்தர் பிலிப்பைன்ஸில் கைது செய்யப்பட்டார்!

தென் கிழக்கு ஆசியாவின் தீவிரவாதக்குழுவான ஜமா இஸ்லாமியாவின் முககிய உறுப்பினரான தாபிக் ரிபகி ஒக்டோபர் 2 ஆம் திகதி பிலிப்பைன்ஸ் நாட்டின் தென்பகுதியில் அமைந்துள்ள விடுதி ஒன்றில் கைது செய்யப்பட்டார்.

சனிக்கிழமை அமெரிக்க அதிபர் 'புஷ்' மணிலாவிற்கு வருவதற்கு முன் இவர் கைதுசெய்யப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

இதனிடையே அமெரிக்க அதிபர் பிலிப்பைன்ஸ் ஜனாதிபதி குளோரியா மக்கபாகல் உடன், பயங்கரவாதத்திற்கெதிரான நடவடிக்கைகள் தொடர்பான பேச்சுக்களில் ஈடுபடுவதற்காக பிலிப்பைன்ஸுக்கு வந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதனிடையே முஸ்லிம் தீவிரவாதிகளுடன் தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்வதற்காகவே, அவ் விடுத்திக்கு வந்திருந்ததாக பாதுகாப்பு அமைச்சின் காரியதரிசி ஏர்மிரா தெரிவித்திருந்தார்.

ஜமா இஸ்லாமியா அமைப்பின் குண்டுகள் தயாரிப்பதில் புலமை பெற்றிருந்த பதூர் ரொமன் ஒரு வாரத்திற்கு முன் பொலிஸாருடன் ஏற்பட்ட மோதலில் கொல்லப்பட்டிருந்தார்.

### ஈரானின் ஜனநாயகத்திற்காக உழைக்கப்போவதாக சிரின் ஏபாடி தெரிவிப்பு

அண்மையில் சமாதானத்திற்காக நோபல் பரிசுபெற்ற ஈரானியரான சிரின் ஏபாடி - ஈரானில் சுதந்திரத்திற்காகவும் ஜனநாயகத்திற்காகவும் உழைக்கப் போவதாகத் தெரிவித்தார்.

தெஹ்ரானில் செய்தியாளர்கள் மததியில் உரையாற்றும்போது, தான் அரசியலில் பிரவேசித்து மக்களுக்குச் சேவைசெய்ய விரும்புவதாகக் கூறினார்.

பல சர்வதேச மனித உரிமை தொடர்பான சட்டங்களில் ஈரான் கைச்சாத்திட்டபோதும், அவற்றைச் செயற்படுத்துவதில்லை எனறும் அவற்றை நடைமுறைப்படுத்துவதற்காகத்தான் செயற்படப்போவதாகவும், ஈரானில் உள்ள அரசியல் கைதிகளை விடுவிப்பதற்குரிய முயற்சிகளை மேற்கொள்ளப்போவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். அத்துடன் வலதுசாரி பத்திரிகைகள் - ஈரானின் மீது அழுத்தங்களை பிரயோகிப்பதற்காக, அந்நிய சக்திகளால் கொடுக்கப்பட்ட பரிசு என தெரிவித்துள்ளன.

## தீவிரவாதிகளிடம் ஆயுதக் களைவிற்கு

# மொசாம்பிக் படையினர் புறூண்டிக்கு சென்றனர்

புறூண்டியிலுள்ள தீவிரவாத அமைப்பிடம் இருந்து போர் ஆயுதங்களைக் களைவதற்காக, பிரித்தானிய அரசினால் நிதியுதவி அளிக்கப்பட்ட மொசாம்பியன் படையினர் அந்நாட்டிற்கு அனுப்பப்பட்டுள்ளனர்.

பிரித்தானிய அரசு 3.7 மில்லியன் பவுண்சை மொசாம்பியாவிடம் வழங்கியுள்ளது. இத்தொகையை புறூண்டி அரசுக்கெதிராக போரிடும் கூரு தீவிரவாத குழுக்களிடம் இருந்து ஆயுதங்களைக் களைவதற்கு உபயோகிக்கப்படவுள்ளது.



இதனிடையே - தேசிய விடுதலை அமைப்பு அரசுடன் பேச்சுவார்த்தைக்கு இணைந்துகொள்ள மறுத்துவிட்டது. 6.5 மில்லியன் சிறுபான்மை ருட்சி மக்கள் எதுவித நன்மையும் அடையப்போவதில்லை எனவும் அவர்கள் தெரிவித்தனர்.

## கடந்த வெள்ளி கடத்தப்பட்ட

# நேபாளத்தின் மாநகர மேயர் தீவிரவாதிகளால் விடுதலை

மாவோ தீவிரவாதிகளால் நேபாளத்தின் மாநகரத் தலைவர் நந்தா பிரசாத் பராரியும் அவரது உதவித் தலைவர் ருத்திரா டகலும் காத்மண்டு தென்பகுதியில் பரத்பு,ரில் கடந்த வெள்ளிக்கிழமை கடத்தப்பட்டிருந்தார்கள்.

மீணடும் இவர்கள் தமது பதவிகளில் இணைந்துகொள்ளக்கூடாது என்ற நிபந்தனையில் விடுவிக்கப்பட்டார்கள்.

இருவரும் பிரதம மந்திரியின் ரத்நயா பிரயரந்திரா கட்சியைச் சேர்ந்தவர்கள்.

மாவோ தீவிரவாதிகளின் நடவடிக்கைகளால் கடந்த ஒரு வருடமாக உள்ளூர் சபைகளுக்கான தேர்தல்கள் நடைபெறவில்லை. இதே நேரத்தில் தேசிய மட்டத்திலான தேர்தல்களும் நடத்தப்படவில்லை.

அரசியல் சட்டத்தில் மாற்றங்கள் உருவாக்கி மன்னர் ஆட்சி நிறுத்தப்பட வேண்டும் என மாவோ தீவிரவாதிகள் போராடி வருகின்றார்கள்.

அண்மையில் பேச்சுவார்த்தைகள் தோல்வியில் முடிவடைந்தபின் ஆட்கடத்தல்கள் அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தற்கொலைத் தாக்குதலை நிறுத்த

# தனியான விசேட படைப்பிரிவு இஸ்ரேலிய அரசு தீர்மானம்

காஸா மேற்குக் கரைப்பகுதியில் அதிகரித்துவரும் வன்முறை, தற்கொலைக் குண்டுத் தாக்குதல்களை முறியடிப்பதற்கு பிரத்தியேக படையினரை பணியில் ஈடுபடுத்துவதற்கு இஸ்ரேல் அரசு தீர்மானித்துள்ளது. படையின் எண்ணிக்கை, உடன் அதிகரிக்க வேண்டியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இஸ்ரேல் நாடாளுமன்றத்தில் நிதிப்பற்றாக்குறை காரணமாக கூடுதலான படையினரை உடன் சேர்த்துக்கொள்ள முடியாதுள்ளதாகவும், பிரத்தியேக படையணியை உடன் கடமையில் ஈடுபடுத்தவுள்ளதாகவும் இராணுவத்தைச் சேர்ந்த அதிகாரி ருத் ஜரோன் தெரிவித்தார்.

நேற்று யஸீர் அரபாத்தின் பத்தா அமைப்பைச் சேர்ந்த மூவர் அமெரிக்காவிற்கு சென்றுள்ளதாகவும்- தற்காலிக போர் நிறுத்தம் ஒன்றிற்கு முயற்சிப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேநேரத்தில் அரபாத்தின் முயற்சி - செத்துப் போன குதிரைக்கு உயிர்கொடுக்கும் முயற்சி என இஸரேல் தெரிவிக்கிறது.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# ஜே.வி.பியுடன் கூட்டணி அமைக்க தற்போது சாத்தியம் இல்லையாம்!

## பொ.ஐ.மு. பொதுச்செயலாளர் டி.எம்.ஜெயரத்ன தெரிவிப்பு

ஜே.வி.பியுடன் வருங்காலத்தில் கூட்டுச் சேருகின்ற சாத்தியக்கூறுகளை, பொதுஜன ஐக்கிய முன்னணியின் பொதுச் செயலாளர் டி.எம். ஜெயரத்ன நிராகரித்திருக்கிறார்.

கொழும்பிலிருந்து வெளிவரும் ஆங்கிலப் பத்திரிகை ஒன்றுக்கு பேட்டியளிக்கையிலேயே அவர், இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க புதிதாகத் தேர்தலை நடத்துவதற்கு உத்தேசித்திருக்கிறார் என்ற வதந்தி, ஓரளவு உண்மையாக இருக்கலாம்.

அத்தகைய தீர்மானம் பற்றி, இதுவரை கட்சிக்கு அறிவிக்கப்படவில்லை. ஜனாதிபதி பொதுஜன ஐக்கிய முன்னணியின் சிரேஷ்ட தலைவர்களுக்கு விடுத்துள்ள பணிப்புரையில், கட்சியைக் குறிப்பாக மாவட்ட ரீதியாக மறுசீரமைக்கும்படி கேட்டிருக்கலாம்.

எந்த நேரத்திலும், பொதுஜன ஐக்கிய முன்னணி தேர்தல் ஒன்றைச் சந்திக்கத் தயாராகவுள்ளது. ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்தைத் தோற்கடிப்பதற்கு நல்ல சாத்தியக்கூறுகள் இருப்பதாக ஜெயரத்ன மேலும் கூறினார்.

## நிமலராஜன் நினைவுதினம் அனுஷ்டிப்பு

ஊடகவியலாளர் மயில்வாகனம் நிமலராஜனின் மூன்றாவது ஆண்டு நினைவு தினமும், அஞ்சலிக்கூட்டமும் - நேற்று வட இலங்கை பத்திரிகையாளர் சங்கத்தில் செ.கதிர்காமத்தம்பி தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் - சங்கத்தலைவா மலர்மாலை அணிவித்து, அஞ்சலி செலுத்தினார். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே. சிவாஜிலிங்கம், பத்திரிகையாளர் மாணிக்கவாசகம் உட்பட, பலர் கலந்துகொண்டு உரையாற்றினர்.(111)

## புலம்பெயர்ந்த...

வாழ்ந்துவருகின்றார்கள். அவர்களுக்கு தற்போது முன்னெடுக்கப்பட்டு வரும் சமாதான நடவடிக்கைகள் பற்றி விளக்கமளிக்கவேண்டிய தேவை உள்ளதாலும், அவர்களது ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்ள வேண்டியிருப்பதாலும் - அவர்களை சந்தித்துக் கலந்துரையாடவேண்டிய தேவைகுறித்து தாம் நோர்வேப் பிரதி வெளிவிவகார அமைச்சர் விதார் ஹெல்கிசனுடனான சந்திப்பின்போது வலியுறுத்திக் கூறியதாக, கேணல் கருணா மேலும் தெரிவித்தார்.

## தமிழ்ச்செல்வனை...

உறுப்பினர்களுக்கும், தமிழர் விடுதலைக் கூட்டணியின் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சம்பந்தனுக்கும் அழைப்புவிடுக்கப்பட்டிருப்பதாகத் தெரியவருகிறது.

## புலிகளின்...

தமானதென புலிகள் கருதுவதாகவும், 24 ஆம் திகதியன்று திட்டவரைபை கையளிக்கமுடியாத பட்சத்தில், 31 ஆம் திகதியன்று அரசிடம் கையளிக்க புலிகள் தீர்மானித்திருப்பதாகவும் வன்னியிலிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

புலிகள் தரப்பு திட்டவரைபு நோர்வே ஊடாக அரசாங்கத்திடம் சமர்ப்பிக்கப்பட்ட மறுநாள் கிளிநொச்சியில், பெரியளவிலான செய்தியாளர் மாநாடொன்றை நடத்துவதற்கும் விடுதலைப் புலிகள் ஏற்பாடு செய்து வருகின்றனர்.

புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் நடத்தவுள்ள இந்தச் செய்தியாளர் மாநாட்டுக்கு பெருமளவிலான உள்நாட்டு - வெளிநாட்டுச் செய்தியாளர்களுக்கு அழைப்புவிடப்படும் எனவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

## நாற்சந்தி

யாழ்.நிலைவரம் குறித்து இந்திய அதிகாரிகள் அவதானிப்பு. யாழ்.பாதுகாப்பு நிலை தொடர்பாக பிரிட்டிஷ் இராணுவ அதிகாரிகள் ஆராய்வு

யாழ்.உயர்பாதுகாப்பு வலயம் மற்றும் பாதுகாப்பு குறித்து ஆராய அமெரிக்க அதிகாரிகள் நேரில் வருகை....!

அன்றாடம் வெளிவரும் பத்திரிகைச் செய்திகள் இத்தகைய தலைப்புடன் வருவது ஒரு வழமையாகிவிட்டது.

இவர்களுக்கெல்லாம் யாழ்ப்பாண நிலைவரம் குறித்து இப்போது திடீர் திடீரென அக்கறை ஏற்படக் காரணம் என்ன? ஒருவர் மாறியொருவராக இங்கு வருகைதந்து இவர்கள் எதைப்பற்றி எதற்கு ஆராய்ச்சி நடத்துகிறார்கள்? இவர்கள் வருகை எந்தவகையிலும் தமிழ்மக்களின் பாதுகாப்பு மற்றும் இயல்பு வாழ்க்கை குறித்த அக்கறையால் ஏற்பட்டதில்லை என்பதை யாவரும் கூறவேண்டியதில்லை.

அவர்களின் அக்கறைகள் யாவும் அவர்களின் சுயஅபிலாஷைகளை அடிநோக்கமாகக் கொண்டவைதான் என்பதையும் எவரும் அறிவர்.

உண்மையில் இந்தச் சமாதான கால திக் விஜயங்களின் நோக்கங்கள் தமிழ்மக்களுக்குச் சாதகமானவையாக இருக்காது.

அப்படி இருப்பின் அரசு அவர்களை உள்ளே வர அனுமதிக்காது அப்படியானால்?....

'சோழியன் குடுமி சும்மா ஆடுமா'? என்று குறியீடாக கேட்கிறார்' ஒரு அரசியல் ஆய்வாளர்.

-தெருவாசி

# 1990-1994 ஆண்டு காலப்பகுதியில் ஏழாயிரம் ஆயுதப்படையினர் பலி!

## பாதுகாப்பு அமைச்சு உத்தியோகபூர்வ தகவல்

(கொழும்பு)

1990 ஆம் ஆண்டிற்கும், 1994 ஆம் ஆண்டிற்கும் இடைப்பட்ட காலப்பகுதியில், வடக்கு - கிழக்குப் பகுதிகளில் இடம்பெற்ற மோதல் சம்பவங்களில் - முப்படையினர் மற்றும் பொலிஸார் என ஏழாயிரத்திற்கும் மேற்பட்ட ஆயுதப்படையினர் கொல்லப்பட்டதாக, பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

முப்படைகளின் தளபதிகள் மற்றும் பொலிஸ்மா அதிபர் ஆகியோர் தமது பகுதிகளில் உயிரிழந்த ஆயுதப் படையினரின் விபரங்களை பாதுகாப்பு அமைச்சிடம் தெரிவித்துள்ளனர்.

அக்காலப்பகுதியில் ஆகக்கூடுதலாக, 1990 ஆம் ஆண்டில் 1639 படையினர் - கொல்லப்பட்டுள்ளனர்.

இதேவேளை, 1980 ஆம் ஆண்டிற்கும் 1987 ஆம் ஆண்டிற்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் மொத்தம் 1511 ஆயுதப்படையினரே கொல்லப்பட்டதாகவும், பாதுகாப்பு அமைச்சின் உத்தியோகபூர்வ அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## திருமலையில்....

தமிழர் தாயகப் பிரதேசம் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது. ஆகவே, திருகோணமலையில் இடம்பெறவுள்ள பொங்குதமிழ் நிகழ்வு அதிக அர்த்தபூர்வமானதாக அமையும் என, பொங்கு தமிழ் ஏற்பாட்டுக் குழுவினர் தெரிவித்தனர்.

## கூட்டமைப்பு...

நாளை செவ்வாய்க்கிழமை நாடாளுமன்றத்தில் இந்தப் பிரேரணை விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு வாக்கெடுப்பு நடத்தப்படுமெனவும் கூறப்படுகிறது.

கூட்டமைப்பினருடனான இந்தச் சந்திப்புக்கு அமைச்சர் ஹக்கீம் தலைமை வகிப்பார் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

## கண்காணிப்புக்குழுவின் தகவல்...

இந்தத் தகவல், பாதுகாப்பு அமைச்சுக்குத் தெரியப்படுத்தப்பட்டது.

இந்தச் சம்பவம் தொடர்பாக பாதுகாப்பு அமைச்சு - கண்காணிப்புக்குழுவினரையும் அழைத்துச் சென்று, சந்தேகத்துக்கிடமான கப்பலைத் தேடும்படி கடற்படைக்கு உத்தரவு பிறப்பித்திருந்தது. அதன்படி, கண்காணிப்புக் குழுவினரையும் ஏற்றிக்கொண்டு திருமலை டொக்யாட் துறைமுகத்திலிருந்து இரண்டு கடற்படைப் பீரங்கிக் கலங்கள் சென்றவேளை - கண்காணிப்புக்குழுவினர் தாம் கொண்டு சென்ற சற்ரலைட் தொலைபேசி மூலம் தமது தலைமையகத்திற்கு தாம் செல்லும் விபரங்களைத் தெரியப்படுத்தினர்.

இவ்வாறு கண்காணிப்புக்குழு தலைமையகத்திற்குத் தெரிவித்த தகவல் புலிகளுக்குக் கிடைத்ததாகவும், இதனால், புலிகளின் கப்பல் தப்பிச்செல்ல வழிவகுத்துவிட்டதாகவும், கடற்படைத் தளபதி தயா சந்தகிரி தெரிவித்தார்.

கடற்படைத்தளபதியின் குற்றச்சாட்டை மறுத்த கண்காணிப்புக்குழுவின் பேச்சாளர் அக்னஸ் பிரகடோட்ரயர், நாங்கள் உண்மைத் தன்மைகளை எமது நிலையிலிருந்து தெரிவித்தோம். நாம் இந்த நாட்டின் உள்நாட்டு விடயங்களில் தலையிடுவதோ, கலந்துரையாடுவதோ இல்லையெனத் தெரிவித்தார்.

இதேவேளை, இச்சம்பவம் தொடர்பாக உடனடியாக நேற்றுமுன்தினம், பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஒஸ்ரின் பெர்னாண்டோ ஆகியோர் கலந்துகொண்டனர்.

கண்காணிப்புக்குழுவின் தகவல் பரிமாற்றம் மூலம், புலிகளுக்கு - இது தொடர்பான செய்தி சென்றடைந்ததா என்பது குறித்து இந்த மாநாட்டில் ஆராயப்பட்டது. இந்தச் சம்பவம் தொடர்பாக, இன்னொரு உயர்மட்டக் கூட்டம் திருகோணமலையில் நேற்று நடைபெற்றது.

அந்தக் கூட்டத்தில், பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன, பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஒஸ்ரின் பெர்னாண்டோ, கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் தயா சந்தகிரி, கிழக்கு கடற்படை தளபதி றியர் அட்மிரல் வசந்த கரன்னகொட ஆகியோரும் - சம்பவதினம் கடலில் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த கடற்படைக் கலங்களின் கட்டளை அதிகாரிகளான திஸநாயக்க, றுவன் பத்திரன ஆகியோரும் கலந்து கொண்டனர்.

இந்தச்சந்திப்பின் போது, இவ்வாறான சந்தர்ப்பங்களில் எவ்வாறு அதனை எதிர்கொள்வது என்பது குறித்து விரிவாக ஆராயப்பட்டது. இத்தகைய சூழ்நிலைகளில் கையாளப்படவேண்டிய விசேட நடைமுறை ஒன்றை உடனடியாக உருவாக்குவதெனவும் முடிவுசெய்யப்பட்டது.

அத்துடன், இந்தப் பிரச்சினைகள் தொடாபாக அடுத்தவார முற்பகுதியில் - பாதுகாப்பு அமைச்சின் அலு

mini INFOTEL LANKA 2003
யாழ்ப்பாணம்
2003 ஐப்பசித்திங்கள் 24 முதல் 26 வரை
காலை 10 மணி முதல் மாலை 9 மணி வரை

# 1990-1994 ஆண்டு காலப்பகுதியில் ஏழாயிரம் ஆயுதப்படையினர் பலி!

## பாதுகாப்பு அமைச்சு உத்தியோகபூர்வ தகவல்

(கொழும்பு)

1990 ஆம் ஆண்டிற்கும், 1994 ஆம் ஆண்டிற்கும் இடைப்பட்ட காலப்பகுதியில், வடக்கு - கிழக்குப் பகுதிகளில் இடம்பெற்ற மோதல் சம்பவங்களில் - முப்படையினர் மற்றும் பொலிஸார் என ஏழாயிரத்திற்கும் மேற்பட்ட ஆயுதப்படையினர் கொல்லப்பட்டதாக, பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

முப்படைகளின் தளபதிகள் மற்றும் பொலிஸ்மா அதிபர் ஆகியோர் தமது பகுதிகளில் உயிரிழந்த ஆயுதப் படையினரின் விபரங்களை பாதுகாப்பு அமைச்சிடம் தெரிவித்துள்ளனர்.

அக்காலப்பகுதியில் ஆகக்கூடுதலாக, 1990 ஆம் ஆண்டில் 1639 படையினர் - கொல்லப்பட்டுள்ளனர்.

இதேவேளை, 1980 ஆம் ஆண்டிற்கும் 1987 ஆம் ஆண்டிற்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் மொத்தம் 1511 ஆயுதப்படையினரே கொல்லப்பட்டதாகவும், பாதுகாப்பு அமைச்சின் உத்தியோகபூர்வ அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கலந்துகொண்டு உரையாற்றினர்.(111)

## திருமலையில்....

தமிழர் தாயகப் பிரதேசம் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது. ஆகவே, திருகோணமலையில் இடம்பெறவுள்ள பொங்குதமிழ் நிகழ்வு அதிக அர்த்தபூர்வமானதாக அமையும் என, பொங்கு தமிழ் ஏற்பாட்டுக் குழுவினர் தெரிவித்தனர்.

## கூட்டமைப்பு...

நாளை செவ்வாய்க்கிழமை நாடாளுமன்றத்தில் இந்தப் பிரேரணை விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு வாக்கெடுப்பு நடத்தப்படுமெனவும் கூறப்படுகிறது.

கூட்டமைப்பினருடனான இந்தச் சந்திப்புக்கு அமைச்சர் ஹக்கீம் தலைமை வகிப்பார் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

## தமிழ்ச்செல்வனை...

உறுப்பினர்களுக்கும், தமிழர் விடுதலைக் கூட்டணியின் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சம்பந்தனுக்கும் அழைப்புவிடுக்கப்பட்டிருப்பதாகத் தெரியவருகிறது.

புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் நடத்தவுள்ள இந்தச் செய்தியாளர் மாநாட்டுக்கு பெருமளவிலான உள்நாட்டு - வெளிநாட்டுச் செய்தியாளர்களுக்கு அழைப்புவிடப்படும் எனவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

## கண்காணிப்புக்குழுவின் தகவல்...

இந்தத் தகவல், பாதுகாப்பு அமைச்சுக்குத் தெரியப்படுத்தப்பட்டது.

இந்தச் சம்பவம் தொடர்பாக பாதுகாப்பு அமைச்சு - கண்காணிப்புக்குழுவினரையும் அழைத்துச் சென்று, சந்தேகத்துக்கிடமான கப்பலைத் தேடும்படி கடற்படைக்கு உத்தரவு பிறப்பித்திருந்தது. அதன்படி, கண்காணிப்புக் குழுவினரையும் ஏற்றிக்கொண்டு திருமலை டொக்யாட் துறைமுகத்திலிருந்து இரண்டு கடற்படைப் பீரங்கிக் கலங்கள் சென்றவேளை - கண்காணிப்புக்குழுவினர் தாம் கொண்டு சென்ற சற்றலைட் தொலைபேசி மூலம் தமது தலைமையகத்திற்கு தாம் செல்லும் விபரங்களைத் தெரியப்படுத்தினர்.

இவ்வாறு கண்காணிப்புக்குழு தலைமையகத்திற்குத் தெரிவித்த தகவல் புலிகளுக்குக் கிடைத்ததாகவும், இதனால், புலிகளின் கப்பல் தப்பிச்செல்ல வழிவகுத்துவிட்டதாகவும், கடற்படைத் தளபதி தயா சந்தகிரி தெரிவித்தார்.

கடற்படைத்தளபதியின் குற்றச்சாட்டை மறுத்த கண்காணிப்புக்குழுவின் பேச்சாளர் அக்னஸ் பிரகடோட்ரயர், நாங்கள் உண்மைத் தன்மைகளை எமது நிலையிலிருந்து தெரிவித்தோம். நாம் இந்த நாட்டின் உள்நாட்டு விடயங்களில் தலையிடுவதோ, கலந்துரையாடுவதோ இல்லையெனத் தெரிவித்தார்.

இதேவேளை, இச்சம்பவம் தொடர்பாக உடனடியாக நேற்றுமுன்தினம், உயர்மட்ட மாநாடொன்று நடைபெற்றது.

இந்த மாநாட்டில் ,கண்காணிப்புக்குழுவின் தலைவர் ஜெனரல் ட்ரைகேவ் ரெலவ்சன், கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் தயா சந்தகிரி, பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஒஸ்ரின் பெர்னாண்டோ ஆகியோர் கலந்துகொண்டனர்.

கண்காணிப்புக்குழுவின் தகவல் பரிமாற்றம் மூலம், புலிகளுக்கு - இது தொடர்பான செய்தி சென்றடைந்ததா என்பது குறித்து இந்த மாநாட்டில் ஆராயப்பட்டது. இந்தச் சம்பவம் தொடர்பாக, இன்னொரு உயர்மட்டக் கூட்டம் திருகோணமலையில் நேற்று நடைபெற்றது.

அந்தக் கூட்டத்தில், பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன, பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஒஸ்ரின் பெர்னாண்டோ, கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் தயா சந்தகிரி, கிழக்கு கடற்படை தளபதி றியர் அட்மிரல் வசந்த கரன்னகொட ஆகியோரும் - சம்பவதினம் கடலில் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த கடற்படைக் கலங்களின் கட்டளை அதிகாரிகளான திஸநாயக்க, றுவன் பத்திரன ஆகியோரும் கலந்து கொண்டனர்.

இந்தச்சந்திப்பின் போது, இவ்வாறான சந்தர்ப்பங்களில் எவ்வாறு அதனை எதிர்கொள்வது என்பது குறித்து விரிவாக ஆராயப்பட்டது. இத்தகைய சூழ்நிலைகளில் கையாளப்படவேண்டிய விசேட நடைமுறை ஒன்றை உடனடியாக உருவாக்குவதெனவும் முடிவுசெய்யப்பட்டது.

அத்துடன், இந்தப் பிரச்சினைகள் தொடாபாக அடுத்தவார முற்பகுதியில் - பாதுகாப்பு அமைச்சின் அலுவலகத்தில் கண்காணிப்புக்குழுவின் பிரதிநிதிகள், கடற்படைத்தளபதி ஆகியோரைச் சந்தித்து கலந்துரையாடி முடிவுவெடுப்பது என்றும் தீர்மானிக்கப்பட்டது.


mini INFOTEL LANKA 2003

யாழ்ப்பாணம்

2003 ஐப்பசித்திங்கள் 24 முதல் 26 வரை
காலை 10 மணி முதல் மாலை 9 மணி வரை
யாழ் மத்திய கல்லூரியில்

மறக்க முடியாதோர் நிகழ்வு...
தவறவிட முடியாதோர் சந்தர்ப்பம...
குறு தகவல் தொலைக்கண்காட்சி, புதிய தகவல் நுட்ப உலகம் பற்றியதோர் கண்நோக்கினை அளிக்கும்.

தகவல் தொழில் நுட்ப உதவியுடன் என்ன செய்யலாம் என்பதனையும் சகல துறைகளிலும் அது தருகின்ற வரையறையற்ற சந்தர்ப்பங்களையும் கண்காட்சியில் கண்டு கொள்ளலாம்.

அனுமதி
மாணவர் - ரூ 10/-
ஏனையோர் - ரூ 20/-

தவறவிடாதீர்கள்!

Official Airline | Official Bank | Official Sponsors

LIONAIR | NSB | PC HOUSE Innovative Solutions! | intel.



## இந்துமதகுரு தேவை

சர்வதேச அகதிகள் சம்மேளனம் (இலண்டன்) கிளைக்கு, தமிழில் கிரியைகள் செய்யக்கூடிய இளம் இந்துமதகுரு தேவை.

விண்ணப்பிக்க :- P.O BOX - 24359
LONDON - SW17 - OFD

(510)



## தேவை

ஓவ்செற் அச்சு இயந்திர இயக்குநர்கள், சொலனா (Solna 125) அச்சு இயந்திரத்தை இயக்குவதில் அனுபவமுள்ளவர்கள் தேவை

தகைமையுடையவர்கள் அனுபவ சான்றிதழ்களுடன் நேரில் வரவும்

மேற்படி அச்சு இயந்திர இயக்குநர்களாக பயிற்சிபெற்று பணியாற்ற ஆர்வமுடைய அச்சுத்துறையில் அனுபவமுடையோரும் கல்வித் தகைமைச் சான்றிதழ்களுடன் நேரில் வரவும்

ஆளணி முகாமையாளர்
நமது ஈழநாடு
267, நாவலர் வீதி
யாழ்ப்பாணம்



இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 20.10.2003 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.